
# நக்கல் நமசிவாயம்

தற்போதைய கொரோனா நிலைமையில், தாய்மையடைவதை ஒரு வருடம் தாமதப்படுத்துமாறு மருத்துவ நிபுணர்கள் கோரிக்கை விடுத்திருக்கின...

அப்படியென்டா 2028 ஆம் ஆண்டு தரம் ஒண்டுக்கு பிள்ளையள சேர்க்க பெரிசா அடிபாடு இருக்காது என்னங்கோ..




# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 324 பிலவ வருடம், ஆவணி மாதம் 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை (10.09.2021) ஹிஜ்ரி - 1443, ஸபர் பிறை - 02, 0115886187 - பக்கங்கள் 09

'தமிழன்' மின்னிதழ் பதிப்பு e-Paper


# தலிபான்களை அங்கீகரித்தது சீன அரசு

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் தலைமையில் அமைந்துள்ள இடைக்கால அரசாங்கத்தை அங்கீகரிப்பதாக சீனா நேற்று (09) அறிவித்துள்ளது. மேலும் அந்நாட்டுக்கு 31 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான உதவிகள் வழங்குவதாகவும் உறுதியளித்துள்ளது.

இந்த உதவித்தொகையில் அவசர உணவுப்பொருட்கள் மற்றும் தடுப்பூசிகளும் அடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.





விநாயக சதுர்த்தி திருநாள் இன்று அனுஷ்டிக்கப்படுகிறது. இதனைமுன்னிட்டு தமிழகத்தில் விநாயகர் சிலை அலங்காரத்தில் ஈடுபட்டுள்ள சிறுமியொருவரை படத்தில் காணலாம்.

# டெல்ட்டா தடுப்பூசிகளுக்கு கட்டுப்படாது

•யோ.தர்மராஜ்

கொரோனா தொற்றிலிருந்து பாதுகாத்துக்கொள்ள இரு தடுப்பூசிகளையும் பெற்றுக்கொண்டாலும் டெல்ட்டா திரிபு, தடுப்பூசிகளுக்கு கட்டுப்படாது பரவும் ஆபத்து காணப்படுவதாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் நோய் எதிர்ப்பு மற்றும் மூலக்கூறு மருத்துவ பிரிவின் பணிப்பாளர் பேராசிரியர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

உலக சுகாதார ஸ்தாபனம் மற்றும் உலக ஆய்வு நிறுவனங்கள் முன்னெடுத்து வெளியிடப்பட்ட ஆய்வறிக்கையை மேற்கோள்காட்டி தனது உத்தியோகபூர்வ ட்விட்டரில் பதிவொன்றை இட்டே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

டெல்ட்டா திரிபுக்கு மனித உடலின் நோய் எதிர்ப்பு சக்தியையும் தாண்டிச் செல்லும் திறன் உள்ளது. சீனாவின் வூஹான் நகரில் முதலில் கண்டறியப்பட்ட கொரோனாவை விட டெல்ட்டா திரிபானது தடுப்பூசிகளால் உற்பத்தி செய்யப்படும் நோய் எதிர்ப்பு சக்திகளுக்கு 8 வீதத்திற்கும் குறைவான செயற்திறனையே வெளிப்படுத்துகின்றது.

02▶

# இறக்குமதிக்கு 100 வீத உத்தரவாதத் தொகை

## மத்திய வங்கி அவசர அறிவிப்பு

அத்தியாவசியம் அல்லாத பொருட்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதற்கு பொருட்களின் நூறு வீத பெறுமதியான பணத்தை உத்தரவாதத் தொகையாக வங்கியில் வைப்பிலிடப்பட வேண்டும் என இலங்கை மத்திய வங்கி நேற்று (09) அறிவித்தது. குறிப்பிட்ட பணத்தொகையானது அமெரிக்க டொலர்களில் வைப்பிலிடப்பட வேண்டியது அவசியமானதாகவும் மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

அதனடிப்படையில் உத்தரவாதத் தொகை வைப்பிலிடப்பட வேண்டிய 623 பொருட்களின் விபரங்கள் மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டுள்ளன. கையடக்கத் தொலைபேசிகள், வீட்டு மின்சாரப் பொருட்கள், பழங்கள், உள்ளாடைகள் உள்ளிட்டவை இதில் அடங்குகின்றன.

# நில ஆக்கிரமிப்பு குறித்து ஐ.நா. ஆணையருக்கு சிறிதரன் எம்.பி. கடிதம்

நில அபகரிப்பு தொடர்பில் அரசாங்கத்தின் போலியான ஈடுபாடு மற்றும் சீர்திருத்தத்தின் தெளிவற்ற வாக்குறுதிகளை எடுத்துக்கொள்ள வேண்டாமெனக் கோரி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட்டுக்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் கடிதம் எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்தின் விபரம் வருமாறு,

வடக்கிலுள்ள தனியார் மற்றும் அரசாங்க நிலங்களின் இராணுவ ஆக்கிரமிப்பு தொடர்பில் இலங்கை அரசாங்கத்தின் நடவடிக்கைகள் குறித்து இதனை நான் எழுதுகிறேன்.

கொழும்பு மற்றும் ஜெனீவாவில் உள்ள இராஜதந்திரிகளுக்கு இலங்கை அரசாங்கம் எதிர்வரும் HRC அமர்வில் முன்கூட்டியே எழுதிய கடிதம் தொடர்பான கருத்துகளை நான் பதிவுசெய்கின்றேன்,

25.73 ஏக்கர் தனியார் நிலம் 2021 ஜூன்-ஜூலை மாதங்களில் திருப்பி அளிக்கப்பட்டது. (இது கிளிநொச்சி மாவட்டத்தில் இன்னும் ஆக்கிரமிக்கப்பட்ட நிலத்தின் 0.03 வீதம் ஆகும்).

பலாலி விமான நிலையத்திற்காக நிலம் ஒதுக்கி வைக்கப்படுகிறது.

திருப்பித் தர முடியாத நிலத்திற்கு இழப்பீட்டு வழங்கல் வழிமுறை பரிசீலிக்கப்படுகிறது.

02▶

# அடிப்படைவாத இயக்கங்களை உடனடியாக தடைசெய்யுங்கள்



## பொதுபலசேனா ஜனாதிபதிக்கு அவசர கடிதம்

•யோ.தர்மராஜ்

தேசிய பாதுகாப்பைப் பாதிக்கும் ஒரு சூழ்ச்சி நாட்டினுள் முன்னெடுக்கப்படலாம். ஆதலால் ஈஸ்டர் தாக்குதல் போன்ற தீவிரவாதத் தாக்குதல்களை நடத்துவதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்படும் அபாயத்தில் உள்ளது எனச் சுட்டிக்காட்டி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கடிதம்.. 02▶

# மலையக மக்களை கூலிகளாகவே வைக்க முயற்சி



## இ.தொ.கா.வுக்கு தெரியாதாவென மனோ எம்.பி. கேள்வி

பால் உற்பத்திசெய்ய 31 பால் பண்ணைகள் அரசின் தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபையின் கீழ் இருக்கையில், அவற்றை அபிவிருத்தி செய்யாமல், பால் உற்பத்தியை அதிகரிக்கிறோம் என்ற போர்வையில் ஆயிரக்கணக்கான ஏக்கர் மலைத்தோட்ட காணிகளை உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்களுக்கு, கொடுக்க அரசாங்கம் முயல்வதாக தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் குற்றம் சுமத்தியுள்ளார்.

மலையக தொழிலாளர்களின் வாழ்வாதாரத்துக்கு நவீன வழிகாட்டாமல், மலையக தொழிலாளர்களை தொடர்ந்தும் கூலிகளாகவே வைத்துக்கொண்டு, மலையக சுற்றுச் சூழலுக்கும் ஆபத்தை விளைவிக்கும் இதுபற்றி, இ.தொ.கா. என்ற அமைப்புக்கு தெரியாதா? இவர்களுக்கு தங்கள் அரசாங்கத்தில் என்ன நடக்கிறது என்றே தெரியாதா? மலையக காணிகளை இப்படி அடாத்தாக பறிக்க இடம் கொடுத்தால், எமது சமூகம் இன்னமும் நூறு ஆண்டுகளுக்கு தொடர்ந்து கூலித் தொழிலாளர்களாகவே வாழவேண்டி வரும் என்பது புரியவில்லையா?...

02▶

# லாஃப்ஸ் சிலிண்டரின் விலையை அதிகரிக்க கோரிக்கை



லாஃப்ஸ் எரிவாயு சிலிண்டரின் விலையை அதிகரிப்பதற்கு நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையிடம் அந்நிறுவனம் கோரிக்கை முன்வைத்துள்ளது.

அதனடிப்படையில் 12.5 கிலோ எடையுடைய சிலிண்டரின் விலையை 291 ரூபாவால் அதிகரிக்கவும் 05 கிலோ எடையுடைய சிலிண்டரின் விலையை 114 ரூபாவாலும் அதிகரிக்க கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

லாஃப்ஸ் நிறுவனத்தின் கோரிக்கைக்கு அமைய நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையினால் விலை அதிகரிப்புக்கான அனுமதி வழங்கப்படும் பட்சத்தில் 12.5 கிலோ எடையுடைய...

02▶

# இலஞ்ச, ஊழல் மோசடிக்கு அரசாங்கத்தினால் முன்னுரிமை

## மக்களுக்கு பெரும் அழுத்தமென்கிறார் எதிர்க்கட்சித் தலைவர்



நாடு முழுவதும் தற்போது பல்வேறு மோசடிகள் நடைபெற்று வருவதோடு, ஒருபுறம் தரவுகள் அழிப்பு ஊழலும், மறுபுறம் அன்றிஜன் ஊழலும், பிறிதொருபுறம் மருந்துகள் வர்த்தகமும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் இத்தகைய சகல ஊழல்களுக்கு மத்தியிலும் மக்கள் பெரும் கஷ்டங்களால் அழுத்தத்தில் தவிப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

இலஞ்ச, ஊழல் மற்றும் மோசடிகளுக்கு அதிகபட்ச இடமளிக்கும் அரசாங்கம் நாட்டில் செயல்பட்டு வருவதாகவும், அரசாங்கத்தால் செய்யப்பட வேண்டிய மக்கள் செயற்பாடுகளை ஐக்கிய மக்கள் சக்தி, எதிர்க்கட்சியாக முன்னெடுத்து செயற்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

02▶

# ஒற்றுமையை பற்றி பேசியவர்கள் 4 பிரிவுகளாக பிரிந்திருக்கிறார்கள்

## சந்திரகாந்தன் எம்.பி. சாடல்



•கனகராசா சரவணன்

ஒற்றுமை, வடக்கு, கிழக்கு இணைப்பைப்பற்றி மேடைகளில் பேசியவர்கள் இன்று ஐக்கிய நாடுகள் சபைக்கு 4 பிரிவுகளாக கடிதம் அனுப்பியுள்ளனர். இவர்களுக்குள்ளே ஒற்றுமை இருக்கின்றதா? பல கூறுகளாக பிரிந்து கிடப்பவர்கள் மட்டக்களப்பிற்கு வந்து உபதேசம் செய்கின்றார்கள் என நாடாளுமன்ற உறுப்பினரும் மட்டு. மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

02▶

# வடக்கிலிருந்து தெற்குவரை அபிவிருத்தித் திட்டங்கள்

## அமைச்சர் நாமல் யாழில் தெரிவிப்பு

02▶




# தமிழரசு கட்சிக்குள் உருவானது புதிய அணி

## ஐ.நா.வுக்கு தனியான கடிதமும் அனுப்பிவைப்பு

இலங்கை தமிழரசு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளடங்கிய 9 பேர் கையொப்பமிட்ட ஆவணம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் சார்பாக அனுப்பப்பட்ட 4 கடிதங்களும் ஆணையாளரின் கவனத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக, ஐ.நா மனித உரிமைகள்



பேரவை தகவல்கள் கூறுகின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (ரெலோ, புளொட்) - தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் கடிதம்,...

02▶

# வைத்தியர் எலியந்த வைட் கவலைக்கிடம்!

கொரோனா தொற்றுக்குள்ளாகி தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள வைத்தியர் எலியந்த வைட்டின் நிலை மிகவும் கவலைக்கிடமாக இருப்பதாக மருத்துவமனை பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

வைத்தியர் எலியந்த வைட் தற்போது கொழும்பில் உள்ள தனியார் மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைப்பெற்று வருவதோடு, அவருக்கு ஒட்சிசன் அளிக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

மருத்துவர் வைட் இதுவரையில் எந்தவொரு கொவிட் தடுப்பூசியையும் பெற்றிருக்கவில்லை எனவும் மருத்துவமனை பேச்சாளர் குறிப்பிட்டார்.

# நூரளையில் காணாமல்போன யுவதி 4 நாட்களாகியும் கண்டுபிடிக்கப்படவில்லை

*தலவாக்கலை நிருபர்*

நுவரெலியா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நுவரெலியா கிக்கிலியமான வனப்பகுதியில் கடந்த 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை விறகு சேகரிப்பதற்காக தனது தாயுடன் சென்ற 25 வயது யுவதி காணாமல் போய் நான்கு நாட்களாகியும் நேற்றுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. இதனைத் தொடர்ந்து நேற்று வியாழக்கிழமை விசேட பொலிஸ் படையினரும் இராணுவத்தினரும் தேடுதல் பணியில் ஈடுபட்டுள்ளதாக நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

நுவரெலியா பிளான்டேஷன் தோட்ட கீழ்ப் பிரிவில் வசிக்கும் ஜெயபாலன் கவிபுகனலானி என்ற திருமணமாகாத பெண்ணே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

காணாமல்போன தனது மகள் தன்னுடன் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை நுவரெலியா கிக்கிலியமான வனப்பகுதிக்கு விறகு சேகரிக்க வந்ததாகவும் அங்கு தனது மகள் காணாமல் போனதாகவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையின்போது குறித்த பெண்ணின் தாயார் தெரிவித்துள்ளார்.

தன்னோடு விறகு சேகரித்துக் கொண்டிருந்த மகள் அவ்விடத்திலிருந்து எவ்வாறு காணாமல் போனார் என்பது தெரியவில்லை என்றும் சில மணிநேரம் அவ்விடத்தில் கூக்குரல் இட்டு மகளை தேடியதாகவும் அவள் அங்கு இல்லை என்றும் தாய் பொலிஸாரிடம் மேலும் தெரிவித்துள்ளார்.

# சிறுவர்களிடையே வேகமாக பரவும் கொரோனா

## மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

*யோ.தர்மராஜ்*

நாட்டில் சிறுவர்களிடையே கொரோனா தொற்றுப் பரவல் வேகமாக பரவுவதால் தொற்றுக்குள்ளாகும் நோயாளர்களின் எண்ணிக்கை மற்றும் உயிரிழப்போரின் எண்ணிக்கையும் அதிகரித்து வருவதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழு உறுப்பினர் வைத்தியர் வாசன் ரட்ணசிங்கம் எச்சரித்துள்ளார்.

அத்தோடு, 12 - 18 வயதுடைய சிறுவர்களுக்கு பைசர் தடுப்பூசி மட்டுமே வழங்கப்பட வேண்டும் என்பதால் இனிவரும் தடுப்பூசிகளை சிறுவர்களுக்காக ஒதுக்குமாறு சுகாதார அமைச்சிடம் கோரிக்கைவிடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைமை காரியாலயத்தில் நேற்று (09) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனா தொற்றானது ஆரம்பத்தில் சிறுவர்களிடையே பரவுவது மிகக் குறைவாக காணப்பட்ட போதிலும், தற்போது சிறுவர்களிடையே தொற்று பரவுவது வேகமெடுத்துள்ளதால் தொற்றுக்குள்ளாகும் நோயாளர்களின் எண்ணிக்கை மற்றும் உயிரிழப்போரின் எண்ணிக்கையும் அதிகரித்துவருகின்றன. எனவே, சிறுவர்களையும் தடுப்பூசி கொண்டு பாதுகாக்க வேண்டிய கடப்பாடுள்ளது. இது தொடர்பாக சுகாதார அமைச்சுக்கு தெளிவூட்டியுள்ளோம்.

12 – 18 வயதுடையவர்களுக்கு தடுப்பூசிகள் வழங்குவதன் ஊடாக பாடசாலைகளை விரைவில் நாங்கள் ஆரம்பிக்க முடியும். குறிப்பாக, தரம் 7 -13 வரையான பிரிவினரை கற்பித்தலுக்குள் கொண்டுவர முடியும். ஒன்றரை வருடங்களாக பாடசாலைகளை திறக்காதிருப்பது துரதிர்ஷடவசமாகவுள்ளது. ஆகவே, கொரோனாவை கட்டுப்படுத்தி சிறுவர்களையும் பாதுகாத்துக்கொண்டு பாடசாலைகளை ஆரம்பிக்க வேண்டும்.

ஆகவே, எங்களுக்கு கிடைக்கின்ற பைசர் தடுப்பூசியை 12 -18 வயதிற்குட்பட்டவர்களுக்காக ஒதுக்குமாறு சுகாதார அமைச்சரிடம் நாங்கள் முன்வைத்த கோரிக்கைக்கு அமைய ஒக்டோபர் மாதம் முதல் வாரத்தில் கிடைக்கும் 4 மில்லியன் தடுப்பூசியை ஒதுக்குவதுடன், கொவிட் குழுவிலும் இதனை முன்வைப்பதாகவும் எங்களிடம் உறுதியளித்தார் - என்றார்.

## மலையக மக்களை ...

எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் நேற்று கொழும்பில் நடைபெற்ற த.மு.கூ ஊடக சந்திப்பில் மனோ எம்.பி. மேலும் கூறியுள்ளதாவது,

அரச பெருந்தோட்ட அபிவிருத்தி சபைக்குச் சொந்தமான நாவலபிட்டி கலபொடவத்த தோட்டம், கண்டி ஹந்தானை பகுதியைச் சேர்ந்த தெல்தொட்ட தோட்டம், க்றேவ் வெலி தோட்டம் மற்றும் வட்டவளை மவுண்ட் ஜின் தோட்டம் ஆகியவற்றில் சுமார் ஆயிரத்து 100 ஏக்கர்கள் உள்நாட்டு, வெளிநாட்டு தனியார் நிறுவனங்களுக்கு வழங்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இந்த தோட்டங்களை உருவாக்கி நூற்றாண்டுகளாக பரம்பரை பரம்பரையாக அங்கு வாழும் தொழிலாளர்களை உள்வாங்கி, அவர்களுக்கு காணிகள் வழங்கி, பசுமாட்டு வளர்ப்புக்கு உதவிசெய்து, வீட்டு பண்ணை அடிப்படையில், பால் உற்பத்தியை அதிகரிக்க அரசாங்கம் மறுக்கிறது.

இதேபோன்ற தோட்ட காணிகள் தொழிலாளருக்கு மறுக்கப்பட்டு வெளியாருக்கு மாத்திரம் கொடுக்கப்படும் முயற்சிகள் இரத்தினபுரி, கேகாலை மாவட்டங்களிலும் ஆரம்பமாகியுள்ளன. ஒட்டுமொத்தமாக மலையக தொழிலாளர்களை இன்னமும் நூறு வருடங்களுக்கு கூலித்தொழிலாளர்களாகவே வைக்கும் முயற்சியை இந்த அரசாங்கம் முன்னெடுக்கிறது. இதற்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் வாய்மூடி மௌனியாக துணை போகிறது. இதற்கு நாம் இடம் கொடுக்க முடியாது என மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

பால் பொருட்கள் இறக்குமதி நிறுத்தப்பட வேண்டும். உள்நாட்டு பால் உற்பத்தி பெருக வேண்டும். இந்நாட்டில் பாலாறு, தேனாறு ஓட வேண்டும். இவற்றுக்கு நாம் இரண்டு கைகளையும் தூக்கி ஆதரவு வழங்குவோம். ஆனால், இருக்கும் பால்பண்ணைகளை அபிவிருத்தி செய்யாமல், புதிய பண்ணைகளை அமைக்கிறோம் என்ற போர்வையில், மலைக்காணிகளை அபகரித்து, நமது மக்களை நடுத்தெருவில் நிறுத்த இடம் கொடுக்க முடியாது.

காணிகளை பிரித்து, நமது மக்களுக்கும் வழங்குங்கள். கிராமத்து மக்களுக்கும் வழங்குங்கள். பசு மாடுகள் பெற கடன் உதவிசெய்யுங்கள். நமது மக்கள் மிக சிறந்த உழைப்பாளிகள். வீட்டு பால் பண்ணைகளை நடத்தி உங்களுக்கு பால் தருவார்கள். இதன்மூலம் அவர்களது வருமானமும் அதிகரிக்கும். பால் உற்பத்தியும் அதிகரிக்கும். நாடும் செழிக்கும். உலகில் இன்று பால் உற்பத்தி இப்படி சிறு பால் விவசாயிகளால்தான் வளர்க்கப்படுகிறது.

நீங்கள் அடையாளம் கண்டுள்ள அரச பெருந்தோட்ட அபிவிருத்தி சபைக்குச் சொந்தமான மலைக்காணிகள், பால் பண்ணை நடத்த அல்ல, வேறு நடவடிக்கைகளுக்கு பயன்பட போகிறது என எங்களுக்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இதன் உள்நோக்கம் மலைநாட்டு தொழிலாளருக்கு மட்டுமல்ல, இந்நாட்டின் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கும் ஆபத்தை விளைவிக்கும் என எமக்கு தெரியவந்துள்ளது.

இந்த பகுதிகளில் ஏற்கனவே மாணிக்கக் கல் தோண்டும் நடவடிக்கைகள் ஆங்காங்கே நடைபெறுகின்றன. அவற்றை முழுமையாக்கவா இந்த நடவடிக்கை என நாம் கேட்கிறோம். இதனால், இந்த மலைகளில் இயற்கைக்கு எதிராக நடைபெறும் நடவடிக்கைகள் நாட்டின் நீர்பிடிப்பு பிரதேசங்களை பாதிக்கும். மகாவலி கங்கையின் ஆரம்பம் இங்கே என்பதை மறக்காதீர்கள் எனத் தெரிவித்துள்ளார்.

## வடக்கிலிருந்து...

*யாழ். செய்தியாளர்*

தெற்கில் தெய்வேந்திர முனையிலிருந்து வடக்கில் பருத்தித்துறை முனை வரை அரசாங்கத்தினால் அபிவிருத்தி திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அமைச்சர் நாமல் ராஜபக்ஷ யாழ்ப்பாணத்தில் நேற்று (09) தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் அரசினால் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி திட்டங்களை மேற்பார்வை செய்வதற்காக மேற்கொண்ட விஜயத்தின் பின்னர் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான தற்போதைய அரசாங்கமானது வடக்கு, கிழக்கு, தெற்கு என்று பார்க்காது அனைத்து மக்களுக்கும் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. அதிலும் குறிப்பாக வடக்கு கிழக்கு பகுதிகளில் அதிக அளவிலான திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக நீங்கள் ஒன்றே பார்த்துக்கொள்ள முடியும் தற்போது யாழ்ப்பாண மாநகர சபைக்கு புதிய கட்டிடம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது. அது பல மில்லியன் ரூபா மத்திய அரசின் நிதியில் அமைக்கப்பட்டு வருகின்றது.

அதுபோல குளங்கள், வீதி அபிவிருத்தி போன்ற பல்வேறு செயற்திட்டங்கள் வடகிழக்கு பகுதியில் இடம்பெற்று வருகின்றன. எனவே தற்போதைய அரசாங்கமானது வடக்கு, கிழக்கு, தெற்கு என்று பிரிவினையை பார்க்காது அனைத்து பிரதேசங்களிலும் அபிவிருத்தி திட்டங்களை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றது.

எனினும் தற்போது எமக்கு ஒரு பிரச்சினை ஒன்று காணப்படுகின்றது இந்த கொரோனா வைரஸ் என்ற ஒரு பிரச்சினை. எனினும் அந்த கொரோனா வைரஸ் என்ற தடையையும் தாண்டி அதனைக் கட்டுப்படுத்தும் வேலைத் திட்டத்தோடு இந்த அபிவிருத்தியினையும் இந்த அரசாங்கம் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றது.

அத்தோடு தற்போது அத்தியாவசிய பொருட்களின் விலைகள் அதிகரித்ததாக ஒரு குற்றச்சாட்டை முன்வைக்கப்பட்டு வருகின்றது. எனினும் நாட்டின் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் இந்த அத்தியாவசிய பொருட்களின் விலைஅதிகரிப்பு தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்பட்டு அதற்குரிய நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மேலும் நீங்கள் ஒரு கேள்வியைக் கேட்டுள்ளீர்கள். யாழ்ப்பாண மாவட்டத்தில் வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக தற்போது சட்டம் ஒழுங்கு நிலை நாட்டுவதற்கு பொலிஸார் தயாராக உள்ளார்கள்.

எந்த ஒரு இடத்திலும் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றால் அந்த வன்முறை சம்பவம் தொடர்பில் உரிய பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்வதன் மூலம் குறித்த வன்முறைச் சம்பவங்களோடு தொடர்பானவர்களை கைதுசெய்துகொள்ள முடியுமெனவும் தெரிவித்தார்.

## இலஞ்ச, ஊழல்,..

ஐக்கிய மக்கள் சக்தியின் எதிர்க்கட்சியிலிருந்து ஒரு மூச்சு நிகழ்ச்சித் திட்டத்துக்கு ஒருங்கிணைவாக ஆரோக்கியமான நாட்டைக் கட்டியெழுப்பும் நோக்கில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவினால் நாடுபூராகவும் நடைமுறைப்படுத்தும் 'ஜன சுவய' கருத்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட சமூக நலத்திட்டத்தின் 25 ஆவது கட்டமாக 30 இலட்சத்து 90 ஆயிரம் பெறுமதியான அத்தியாவசிய வைத்தியசாலை உபகரணங்கள் கேகாலை மாவட்ட போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் வை.எப்.சமரசிங்கவிடம் நேற்று (09) வழங்கி வைக்கப்பட்டது.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பங்கேற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மக்களுக்கு சேவை செய்வது அரசாங்கத்தின் பொறுப்பாக இருந்தாலும், அரசாங்கம் தனது உற்ற நண்பர்களுக்கு சேவை செய்து வருவதாகவும் அவர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் செய்து தருவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் கூறினார்.

இந்தப் பேரழிவு தருணத்தில் கூட, அரசாங்கம் அபிவிருத்தி பணிகளை மேற்பார்வையிடும் எம்.பி.க்களை நியமிப்பதன் மூலம் பொதுச் செல்வத்தை அழித்து வருவதோடு, உண்மையில் மக்கள் குறித்த கரிசணை இருந்தால், நாடாளுமன்ற உறுப்பினர்களைப் போஷித்து அவர்களை அபிவிருத்தி செய்வதைவிட மக்கள் வாழ்வுரிமையைப் பாதுகாப்பதே முன்னுரிமை என்றும் கூறினார். அரசாங்கம் தனது உறுப்பினர்களுக்கு அனைத்து சலுகைகளையும் வரப்பிரசாதங்களையும் வழங்க நடவடிக்கை எடுத்த போதிலும், மக்களின் நலனுக்காக எதையும் கொடுக்க அரசாங்கம் தயாராக இல்லை என்று கூறிய அவர், இந்த சகல செயற்பாடுகளுக்கும் மக்கள் வரிப்பணத்திலிருந்தே செலவளிக்கப்படுவதை அரசாங்கம் புரிந்துகொள்ள வேண்டும் என்றும் தெரிவித்தார்.

வைத்தியசாலை உபகரணங்களை வழங்கி வைக்கும் 'எதிர்க்கட்சியிலிருந்து ஒரு மூச்சு' நிகழ்ச்சித் திட்டத்தில் இதுவரை 24 கட்டங்கள் நிறைவு பெற்றுள்ளதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இதன்மூலம் எழுநூற்று 40இலட்சங்களுக்கும் அதிகமான வைத்தியசாலை உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டதாகவும் தெரிவித்தார். மக்கள் சார்ந்த இந்த நிகழ்ச்சித் திட்டத்தை இடைவிடாது தொடர்ச்சியாக முன்கொண்டு செல்வதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். கொரோனா பெருந்தொற்று காரணத்தால் பாதிப்புக்குள்ளாகியுள்ள மக்களுக்கு சுகா தார ரீதியாக நிவாரணங்களை வழங்கும் பொருட்டு ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் குழு, அமைப்பாளர்கள், ஐக்கிய மக்கள் சக்தியின் வெளிநாட்டுக் கிளைகள், உள்நாட்டு வெளிநாட்டு ஆதரவாளர்கள் 'ஜன சுவய' கருத்திட்டத்தில் இணைந்து கொண்டு எதிர்க்கட்சியிலிருந்து ஒரு மூச்சு நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றனர்.

இதற்கு முன்னர் 24 கட்டங்களில் 719 இலட்சம் ரூபா பெருமதியான வைத்தியசாலை உபகரணங்களை வழங்கி வைக்க ஐக்கிய மக்கள் சக்தியால் முடிந்தது எனவும் அவர் குறிப்பிட்டார்.

## அடிப்படைவாத...

எழுதியுள்ள பொதுபல சேனா அமைப்பு, அடிப்படைவாத இயக்கங்களை உடனடியாக தடைசெய்யுமாறு கோரிக்கை முன்வைத்துள்ளது.

இதுதொடர்பில் பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சீனா மற்றும் இலங்கை அரசாங்கத்துக்குமிடையிலான நெருங்கிய நட்பு ரீதியான கொள்கையின் காரணமாக, உலகளவிலுள்ள சீனாவின் எதிரிகள் இலங்கையையும் ஒரு எதிரி நாடாக பார்ப்பதால் நாட்டின் மீது அவநம்பிக்கையை வளர்த்து வருகின்றனர். ஆகவே, இலங்கையில் செயற்படும் வெளிநாட்டு புலனாய்வு அமைப்புகளின் செயல்பாடுகளில் அதிக கவனம் செலுத்துவதன் முக்கியத்துவம் குறித்து தங்களின் கவனத்துக்குக் கொண்டுவருகிறோம்.

நல்லாட்சி அரசாங்கத்தின் கடந்த 5 வருடங்களில் புலனாய்வு துறை உள்ளிட்ட பாதுகாப்புத் துறையையும் சீர்குலைத்தமையினால் சஹ்ரான் தலைமையிலான இஸ்லாமிய தீவிரவாதக் குழுக்களால் ஈஸ்டர் தாக்குதலை நடத்துவதற்கான சூழ்நிலையை நாட்டில் உருவாக்கியது. மீண்டும் அவ்வாறானதொரு தாக்குதல் இடம்பெறாதிருப்பதற்கு புலனாய்வுத் துறை உள்ளிட்ட பாதுகாப்புத் துறையையும் மேம்படுத்தி பலமாக வைத்திருக்க வேண்டிய அவசியத்தை நாங்கள் வலியுறுத்துகிறோம். கடந்த காலத்தில் இராணுவ வீரர்களுக்காக குரல் கொடுத்தமையினால் நான் சிறைக்குச்செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. எனினும், எவ்வித நிபந்தனையுமின்றி அதை நான் தொடர்ந்து செய்கிறேன்.

கொரோனா தொற்றுக்கு மத்தியிலும் உலக அரசியல் பொறிமுறைகள் எமது தாய் நாட்டில் தலையிடுவதற்கான முயற்சியையும் காண முடிந்தது. ஒரு நிலையான அரசாங்கம் முன்னெடுக்கப்படும் நிலையில் அதனை சீர்குலைக்கும் ஒரே நோக்கத்துடன் நாட்டில் பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றதையும் தெளிவுப்படுத்த வேண்டும்.

விடுதலைப் புலிகளுடனான போரின் போது, நாடு முழுவதும் பல தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இந்த தாக்குதல்கள் பற்றிய விசாரணைகள் மேற்கொள்வதோடு, விடுதலை புலிகளின் பயங்கரவாதத்தை நாட்டில் இருந்து ஒழிக்கும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் காரணமாக எமது நாடு விடுதலைப் புலிகளின் பயங்கரவாதத்திலிருந்து விடுபட முடிந்தது. அதேபோன்று, இஸ்லாமிய தீவிரவாதம் மூலம் பயங்கரவாதிகள் தோன்றுவதைத் தடுக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது. அதற்காக முன்னெடுக்கப்படும் நடைமுறைகள் துல்லியமாகவும் துரிதமாகவும் முன்னெடுக்கப்பட வேண்டும்.

இஸ்லாம் என்ற பெயரால் அப்பாவி பொதுமக்களை இலக்கு வைக்கப்பட்டு நடத்தப்பட்ட ஏப்ரல் தாக்குதல் தற்போது ஓர் அரசியல் பந்தாக மாறியுள்ளது. இதனூடாக உலக அரசியலும் நகர்ந்துச் செல்வதை காணக்கூடியதாகவுள்ளது. தாக்குதலை நடத்துவதற்கு வழிவகுத்த 'கொலைகார போதனைகள், கொலைகார கோட்பாடுகள்' ஆகியன தொடர்பாக எந்த ஆய்வுகளும் முன்னெடுக்கப்படுவதாக தெரியவில்லை.

நாட்டில் ஸ்திரமற்றத் தன்மையை உருவாக்க தற்போதுவரை, ஏப்ரல் தாக்குதலை திட்டமிட்ட வகையில் பயன்படுத்துவதோடு, மதத் தலைவர்கள் உட்பட சில சக்திகளையும் பயன்படுத்தி வருவதை காணமுடிகின்றது.

சிவில் சமூக அமைப்புகள் மற்றும் தனிநபர்களால் பாதுகாப்பு துறையை ஊக்கப்படுத்தும் செயற்பாடுகளை முன்னெடுத்து அதன் மூலம் தேசிய பாதுகாப்பைப் பாதிக்கும் ஒரு சூழ்ச்சி நாட்டினுள் முன்னெடுக்கப்படலாம். சிறிய பாதுகாப்பு வெற்றிடங்களை கடந்து ஏப்ரல் தாக்குதல் போன்ற தீவிரவாதத் தாக்குதல்களை நடத்துவதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்படும் அபாயத்தில் உள்ளது.

எனவே, இவ்வாறான தீவிரவாதத்தை செயல்படுத்துவதைத் தடுக்க தேசிய பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கான குறுகிய கால திட்டங்கள், நாட்டில் தீவிரவாத போதனைகளை பரப்புவோரை அடையாளம் கண்டறிந்து, அவர்கள் மீது நடவடிக்கை எடுத்தல், தீவிரவாத அமைப்புகளை கண்டறிந்து அவற்றை தடைசெய்தல் போன்ற குறுகிய கால திட்டங்களை முன்னெடுத்து ஒரு பாதுகாப்பான நாட்டை உருவாக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

## லாஃப்ஸ் சிலிண்டரின்...

சிலிண்டரின் விலை 2 ஆயிரத்து 147 ஆக உயர்வடையும். அத்துடன் 5 கிலோ எடையுடைய சிலிண்டரின் விலை 857 ஆக உயர்வடையும்.

குறித்த கோரிக்கை தொடர்பில் ஆராயப்படுவதாக அதிகார சபையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

## டெல்ட்டா தடுப்பூசிகளுக்கு...

ஆகவே, நாட்டில் இரு தடுப்பூசிகளையும் பெற்றுக்கொண்டாலும் அதற்கு கட்டுப்படாது பரவும் வீரியத்தை டெல்ட்டா திரிபு கொண்டுள்ளது. இதனால், தடுப்பூசிகளுக்கு மத்தியிலும் புதிய திரிபுகள் உருவாகுவதற்கான அதிக வாய்ப்புகள் காணப்படுவதால் தடுப்பூசி பெற்றுக்கொண்டாலும் சுகாதார விதிமுறைகளை கடைபிடிப்பது மிக முக்கியமானதாகவுள்ளது – எனத் தெரிவித்துள்ளார்.

## ஒற்றுமையை பற்றி...

மட்டக்களப்பு கள்ளியங்காட்டில் லங்கா சதொச மொத்த விற்பனை நிலையத்தை நேற்று (09) திறந்துவைத்து உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சுமந்திரன், ஐரோப்பா யூனியனையும் அமெரிக்காவை திருப்திப்படுத்தவும் அதற்கு போட்டியாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கஜேந்திரகுமார் பொன்னம்பலமும், முன்னாள் வடமாகான முதலமைச்சர் சி.வி விக்கினேஸ்வரன் சிவில் அமைப்புக்கள் என பல கூறுகளாக பிரிந்து ஐக்கிய நாடுகள் சபைக்கு கடிதம் அனுப்புகின்றனர்.

இவ்வாறு பல கூறுகளாக பிரிந்து கிடப்பவர்கள் மட்டக்களப்பிற்கு வந்து உபதேசம் செய்கின்றார்கள். ஆகையால் யார் முதலில் ஒன்றுபடவேண்டும் என்பதை அவர்கள் சிந்திக்கவேண்டும்

மறுபக்கத்தில் அரசாங்கம் தனது நிலைப்பாட்டை ஒருமித்த குரலிலே ஒன்றாக ஒலித்துக் கொண்டிருக்கின்றது. மட்டக்களப்பு மாவட்டத்திலே உரங்களையும் பதிவுசெய்யப்படாத களஞ்சியசாலைகளில் வர்த்தக நோக்கிலே மறைத்து வைக்கப்பட்டிருந்தது. அதனை அரசாங்கம் பரிசோதித்து கைப்பற்றிய போது அதற்று நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் குரல் எழுப்பினார்.

மட்டக்களப்பு மாவட்டத்திலே எத்தனை மூடை நெல் இருக்கின்றது, எத்தனை மூடை அரிசி இருக்கின்றது என்பதை பார்க்கவேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கின்றது திட்டமிட்ட சதியில் மட்டக்களப்பு மாவட்டத்தில் அரிசியை 120 ரூபாவுக்கு விற்பது என்பது மிக ஒரு அடாத்தான விடயமாக பார்க்கின்றோம்

ஆகவே அரசியல்வாதிகள் என்பதற்காக எல்லா பிழைகளையும் நாங்கள் நியாயப்படுத்த முடியாது. முடிந்தால் ஆலை உள்ளவர்கள் பதிவு செய்து எங்களிடம் 20 ஆயிரம் 30 ஆயிரம் மூடை இருக்கின்றது தெரிவித்து, நெல்லை குத்தி அரிசியாக்க அரசாங்கம் தடைவிதிக்கவில்லை

ஆலைகளே இல்லாமல் தனியே களஞ்சியசாலை களைக் கட்டி நெல்லை களஞ்சியப்படுத்திவிட்டு அதனை அதிகூடிய விலைக்கு விற்க காத்திருப் பவர்களைத்தான் நாங்கள் சுற்றி வளைத்தோம். ஆனால் இந்த விடயத்திலே தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் விலை ஏற்றத்தால் கஷ்டப்படுகின்ற மக்கள் பக்கத்தில் இருக்கவேண்டும் எனத் தெரிவித்தார்.

## நில ஆக்கிரமிப்பு...

மேலும் திரும்பப் பெறப்பட்ட நிலத்தின் விகிதம் தொடர்பில் மிகவும் தெளிவற்ற பல்வேறு சதவிகிதங்கள் வலியுறுத்தப்படுகின்றன. கிளிநொச்சி மாவட்டத்தில் மட்டும் இலங்கை இராணுவம் இன்னும் ஆக்கிரமித்துள்ள நிலங்களின் விபரங்களை உள்ளடக்கிய ஒரு விரிதாளை உங்கள் ஆய்வுக்காக இணைக்கிறேன். வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள இந்த ஒரு மாவட்டத்தில் மட்டும் இன்னும் 4374.8 ஏக்கர் அரசு மற்றும் தனியார் நிலங்கள் ஆக்கி ரமிக்கப்பட்டுள்ளதனை நீங்கள் அறிவீர்கள். Oakland Institute இன் அறிக்கையின் படி 2019 ஆம் ஆண்டின் இறுதியில் முல்லைத்தீவு மாவட்டத்தில் நான்கு மடங்கு நிலம் ஆக்கிரமிக்கப்பட்டிருப்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

கடந்த வருடம் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர, இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நிலம் மீளளிக்கப்படமாட்டாது என அறிக்கைகளுடன் அறிவித்து விட்டு இம்முறை இடம்பெறவுள்ள ஜெனீவா கூட்டத்தொடரிற்கு முன்னர், நில ஆக்கிரமிப்பு தொடர்பான புதிய திட்டங்களை திடீரென அறிவித்தது எவ்வாறு என்று நாங்கள் ஆச்சரியப்படுகிறோம்.

இது தவிர யுத்தம் நிறைவடைந்து 12 வருடங்களின் பின்னர் மற்றும் நிலம் ஆக்கிரமிக்கப்பட்டு பல தசாப்தங்களிற்கு பின்னர் இழப்பீடு மட்டும் ஏன் பரிசீலிக்கப்படுகிறது? அத்துடன் இது எவ்வாறு நல்லிணக்க வாக்குறுதிகளுள் உள்ளடங்குகிறது? நமது மக்கள் பொருளாதார ரீதியாகவும் கலாசார ரீதியாகவும் வாழ நிலம் அத்தியாவசியமாகும்.

தொல்பொருள் அகழ்வாராய்ச்சிகள், வனப் பாதுகாப்பு சரணாலயங்கள் மற்றும் பறவைகள் சரணாலயங்கள் என்ற போர்வையில் நில ஆக்கிரமிப்புகள் நடைபெறுகின்றன. மேலும் அவை பெரும்பாலும் மகாவலி அதிகார சபை, தொல்பொருளியல் திணைக்களம், வன பாதுகாப்புத் திணைக்களம், வன ஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் போன்ற பலவற்றால் மேற்கொள்ளப்படுகின்றன.

தயவுசெய்து இந்த கடிதம் நிலம் தொடர்பான பிரச்சினையை மட்டுமே குறித்து நிற்கின்றது. இராஜதந்திரிகளுக்கு இலங்கை அரசாங்கம் எழுதிய கடிதத்தில் தனித்தனியாக கோடிட்டுக் காட்டக்கூடிய பிற பிரச்சினைகள் தொடர்பாக முன்வைக்கும் கூற்றுக்கள் குறித்து எனக்கு மிகவும் தீவிரமான கவலைகள் உள்ளன.

அரசாங்கத்தின் போலியான ஈடுபாடு மற்றும் சீர்திருத்தத்தின் தெளிவற்ற வாக்குறுதிகளை நீங்கள் எடுத்துக்கொள்ள வேண்டாம் என்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். ஏனெனில் இது பாதிக்கப்பட்டவர்களுக்கு செய்யும் துரோகமாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழரசு கட்சிக்குள்...

இலங்கை தமிழரசுக் கட்சியின் கடிதம், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் கடிதம் ஆகியவற்றுடன், தமிழரசுக் கட்சியின் 9 உறுப்பினர்கள் கையொப்பமிட்ட ஆவணமும் இதன்படி அனுப்பப்பட்டுள்ளன. ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் வரும் 13ஆம் திகதி ஆரம்பிக்கிறது. முதல்நாள் அமர்விலேயே இலங்கை தொடர்பான வாய்மொழி சமர்ப்பிப்புக்களை ஆணையாளர் மிச்செல் பச்லெட் அம்மையார் முன்வைப்பார்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்கு தமிழ்த் தேசிய பரப்பிலிருந்து இதுவரை 4 கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்கள் தேசிய கூட்டணி ஆகியன இணைந்து 5 கட்சிகள், 5 நாடாளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பத்துடன் முதலாவதும், வலுவானதுமான ஆவணம் அனுப்பப்பட்டது.

இதன்பின்னர் இலங்கை தமிழரசுக் கட்சி ஒரு ஆவணத்தை தயார்படுத்தியது. இதில் விடுதலைப்புலிகளின் போர்க்குற்றங்களும் இணைக்கப்பட்டு, புலிகளும் விசாரணைக்குட்படுத்தப்பட வேண்டுமென மறைமுகமாக கோரப்பட்டிருந்தது. இந்த கடிதத்துடன் இலங்கை தமிழரசு கட்சியின் பல உறுப்பினர்கள் உடன்படவில்லை. முக்கியமாக தீவிர தமிழ்த் தேசிய நிலைப்பாடுடைய பிரமுகர்கள் அந்த கடிதத்தை நிராகரித்ததுடன், தமது தரப்பிலிருந்து பிறிதொரு கடிதத்தை அனுப்பினார்களென அறியமுடிந்தது.

இந்த கடிதமே தமிழ் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ற குழுவால் தனியாக அனுப்பப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் என தலைப்பிட்டு அனுப்பப்பட்ட அந்த கடிதத்தில், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சி.சிறிதரன், சாள்ஸ் நிர்மலநாதன், த.கலையரசன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஈ.சரவணபவன், சீ.யோகேஸ்வரன், பா.அரியநேத்திரன், ஞா.சிறிநேசன், மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர் தி.சரவணபவன், கிழக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் எம்.நடராசா ஆகியோர் கையொப்பமிட்டுள்ளனர்.

தமிழரசுக் கட்சிக்குள் இவ்வாறு தனி அணி உருவாகியுள்ளமை தமிழ் அரசியல் பரப்புக்குள் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# இன்றைய ராசி பலன்

நாள்: 10.09.2021 வெள்ளிக்கிழமை - ஆவணி 25

**ஜோதிடர் நற்பவி**

தொலைபேசி இலக்கம் : 0715346213/0714037141

**நட்சத்திரம்: சித்திரை**
பிற்பகல் 12.58 வரை
**சுவாதி**
பி.ப 12.58 - 11.09.2021
காலை 11.22 வரை

**யோகம்: பிராம்யம்**
மாலை 5.42 வரை
**மாகேந்திரம்**
மாலை5.42 - 11.09.2021
பிற்பகல் 2.41 வரை

**திதி: பூர்வ பட்ச சதுர்த்தி**
அ.கா 12.18- இரவு 9.58
**பூர்வ பட்ச பஞ்சமி**
இரவு 9.58 - 11.09.2021
இரவு 7.37 வரை

**கரணம்: வணிஜம்**
அ.கா12.18-காலை11.08
**பத்திரை**
காலை 11.08- இரவு 9.58

**சுப நேரங்கள்**
காலை 6.10 - 7.35
மாலை 4.43 - 6.10

**அசுப நேரங்கள்**

**ராகு காலம்**
காலை10.38 -பி.ப 12.30

**குளிகை காலம்**
காலை 7.36 - 9.07

**எமகண்ட காலம்**
மாலை 3.11 - 4.42

**துர் முகூர்த்தம்**
காலை 8.28 - 9.17
பிற்பகல் 12.32 - 1.21

**மேடம்**
திறமைகளில் நம்பிக்கையுடன் எதிர்மறை எண்ணங்களை நீக்குவது நன்மை. பண நிலை சீராகும். வேலைகள் நல்ல முறையில் தொடங்கும்.
சந்திராஷ்டமம்:
அசுவினி நட்சத்திரத்திற்கு
12.09.2021 அ.கா 4.13-
13.09.2021 அ.கா 2.45 வரை

**ரிஷபம்**
அரசாங்க சம்பந்தப்பட்ட விடயங்களில் நன்மை கிடைக்கலாம். வருங்கால நன்மைக்கான சில நல்ல விடயங்கள் ஈடேறும். பணியிடங்களில் வேலைகள் அதிகரிக்கும்.

**மிதுனம்**
சில விடயங்களில் குடும்பத்தினர் ஆலோசனை நன்மை தரும். பிறரின் விடயங்களில் தலையீடு வேண்டாம். பிடிவாதங்களைக் குறைப்பதும் இன்று நன்மை.

**கடகம்**
பண நிலைமை கவலை தரலாம். காணி, வீடு சம்பந்தப்பட்ட விடயங்களில் இன்று நிதானம் தேவை. சகோதரர்களின் உதவிகள் கிடைக்கப் பெறலாம். இறைவணக்கம் நன்மை தரும்.

**சிம்மம்**
பணியிடங்களில் உயர் பதவியிலிருப்பவர்களின் ஆதரவு உண்டாகும். சில நல்ல எண்ணங்கள் நிறைவேற்றமும், சில பிரச்சினைகள் நீங்கப் பெறுதலும் உருவாகலாம். பணிகளில் கவனம் தேவைப்படலாம்.

**கன்னி**
நிதி, பணம் சம்பந்தப்பட்ட விடயங்களில் கவனம் தேவைப்படலாம். வேலைகளில் முயற்சி, உற்சாகம் நன்மை தரும். இன்று இறைவணக்கம் பிரச்சினைகளை குறைக்கும்.

**துலாம்**
தம்பதியரிடையே மகிழ்ச்சி நிலவும். வணிகத்தில் இலாபம் அதிகரிக்கும். சுப மங்கள நிகழ்வுகள் உண்டாகலாம். வேலைகளும் சிறப்புறும்.

**விருச்சிகம்**
ஊடகத்துறையில் இருப்பவர்களுக்கு பணிகளில் கவனம் தேவைப்படலாம். வாகனங்களில் பழுது ஏற்படலாம். பணியிடங்களில் கூடுதல் வேலை உண்டாகலாம். இறைவணக்கம் பிரச்சினைகளைக் குறைக்கும்.

**தனுசு**
பிரசித்தி பெற்றவர்களின் நட்பு கிடைக்கப் பெறலாம். நல்ல வேலைகளுக்கான சாதக நிலை உருவாகலாம். உடல்நலம் மேம்படும்.

**மகரம்**
தம்பதியர் தங்களுக்குள் கலந்தாலோசித்து குடும்ப நலனுக்கான முடிவுகளை உருவாக்குவார்கள். பணி திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும். ஊடக விளம்பரங்கள் வணிக மேம்பாட்டுக்கு உதவும் சாதகமான நிலை உண்டாகலாம்.

**கும்பம்**
தொழில் தொடங்கப் பெறலாம். புகழ்பெற்ற நிறுவனங்களில் பதவி கிடைக்கப் பெறலாம். வீட்டு வேலைகளும் நிறைவேறும்.

**மீனம்**
கோபத்தைத் தவிர்ப்பதும், பிறரின் விடயங்களில் தலையீடு செய்யாமல் இருப்பதும் நன்மை. உடல்நலத்தில் சிறிய கவனம் தேவைப்படலாம். வயது முதிர்ந்த உறவு பெண்களின் உடல்நலத்திலும் சிறிய கவனம் தேவைப்படலாம்.
சந்திராஷ்டமம்:
உத்தரட்டாதி நட்சத்திரத்திற்கு
காலை 7.21 -11.09.2021
அதிகாலை 5.46 வரை
ரேவதி நட்சத்திரத்திற்கு
11.09.2021 - அ.கா 5.46
12.09.2021 அ.கா 4.13 வரை

## கொரோனா தொற்றுக்குள்ளானோர் விபரம்

| மொத்த பாதிப்பு | சிகிச்சை பெறுவோர் | குணமடைந்தோர் | புதிதாக அடையாளம் | மரணம் |
|---|---|---|---|---|
| 4,74.780 | 55.975 | 4,80,116 | 2,917 | 10,689 |

# போதைப்பொருள் வியாபாரி பொப் மாலி கைது

போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் பொலிஸாரால் தேடப்பட்டு வந்த பொப் மாலி என்றழைக்கப்படும் சமிந்த தாப்ரு எல்பிட்டிய பிரதேசத்தில் வைத்து நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப்பிரிவு அதிகாரிகளினால் இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பேருவளை கடற்பரப்பில் கடந்த 31ஆம் திகதி 228 கிலோ கிராமுக்கும் அதிக எடையுடைய ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபர்கள் ஐவர் கைதுசெய்யப்பட்டிருந்தனர். இந்நிலையில், இந்த வியாபாரத்தை முன்னெடுத்த பிரதான சந்தேகநபராக பொப் மாலி அடையாளம் காணப்பட்டிருப்பதாக பொலிஸ் தலைமையகம் நேற்று முன்தினம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 51 கிலோ கேரள கஞ்சாவுடன் இருவர் கைது

மருதானை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டீன்ஸ் வீதி பிரதேசத்தில் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 51 கிலோ கேரள கஞ்சா போதைப்பொருளுடன் சந்தேகநபர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கோனஹேன பொலிஸ் விசேட அதிரடிப்படை முகாம் அதிகாரிகளினால் மருதானை, டீன்ஸ் வீதியில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போதே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்களிடமிருந்து 51 கிலோ 836 கிராம் கேரள கஞ்சாவும் மீட்கப்பட்டுள்ளது.

போதைப்பொருளுடன் காரொன்றில் பயணித்துக்கொண்டிருந்த போதே இவர்கள் இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கணேமுல்ல மற்றும் மீரிகம ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 33 மற்றும் 34 வயதுடைய இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர். இதுதொடர்பில் பொலிஸ் போதைப்பொருள் பணியகத்தினால் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட ஆயிரம் கிலோ மஞ்சள் கடற்படையினரால் மீட்பு

## கைதான சந்தேகநபர்கள் இருவர் சிலாவத்துறை பொலிஸாரிடம் ஒப்படைப்பு





சிலாவத்துறை, சாவாரிபுரம் பிரதேசத்தை அண்மித்த கடற்பரப்பில் நேற்று அதிகாலை கடற்படையினரால் முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின்போது சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டுவர முயற்சிக்கப்பட்ட ஆயிரத்து 172 கிலோ உலர் மஞ்சள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், சந்தேகநபர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக கடற்படை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்போது இவர்களிடமிருந்து டிங்கி படகொன்றும் மீட்கப்பட்டுள்ளதாக கடற்படை ஊடகப்பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

விலாவத்துறை, சாவாரிபுரம் பிரதேசத்தை அண்மித்த கடற்பரப்பில் முன்னெடுக்கப்பட்ட இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது கடற்கரையை நோக்கிப் பயணித்த சந்தேகத்துக்கிடமான டிங்கி படகொன்று பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இதன்போது அந்தப் படகிலிருந்து சட்டவிரோதமாக கடல்மார்க்கமாக நாட்டுக்குள் கொண்டுவர முயற்சிக்கப்பட்ட, 18 உறைகளில் பொதியிடப்பட்ட 679 கிலோ உலர் மஞ்சள் மீட்கப்பட்டுள்ளதுடன், அந்தப் படகிலிருந்த சந்தேகநபர்கள் இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மேலும், அக்கடற்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட மேலதிக சோதனை நடவடிக்கைகளின்போது வியாபாரிகளினால் கைவிடப்பட்டுச் சென்றுள்ளதாக சந்தேகிக்கப்படும் மேலும் 13 உறைகளில் பொதியிடப்பட்ட 493 கிலோ உலர் மஞ்சள் தொகை மீட்கப்பட்டுள்ளது. அதற்கமைய, இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின்போது மொத்தமாக ஆயிரத்து 172 கிலோ உலர் மஞ்சள் கடற்படையினரால் பொறுப்பேற்கப்பட்டுள்ளது.

சிலாவத்துறை, சாவாரிபுரம் பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதுடைய இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர். இதன்போது கைப்பற்றப்பட்ட மஞ்சள் தொகை, டிங்கி படகு என்பவற்றுடன் சந்தேகநபர்கள் இருவரையும் மேலதிக விசாரணைகளுக்காக சிலாவத்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்க கடற்படை நடவடிக்கை எடுத்துள்ளது.

# வவுனியா- சாந்தசோலை கிராமத்தில் 43 பேருக்கு கொரோனா தொற்று உறுதி

*(வவுனியா நிருபர்)*

வவுனியா, சாந்தசோலை கிராமத்தில் கொரோனா தொற்று நிலைமை தீவிரமடைந்துள்ளதாகவும், அந்தக் கிராமத்தில் 43 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, சாந்தசோலை கிராமத்தில் கொரோனா தொற்று அபாயமிருப்பதாக கிராமத்தின் பொது அமைப்புக்கள் முன்வைத்த கோரிக்கைக்கு அமைவாக சுகாதாரப் பிரிவினரால் கடந்த சனிக்கிழமை (04.09.) சாந்தசோலை கிராமத்தில் அன்ரிஜன் மற்றும் பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இதன்படி, நோய் அறிகுறி காணப்பட்டவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையில் 12 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின் முடிவுகள் நேற்று முன்தினமிரவு வெளியாகியிருந்தன.

அதில் 31 பேருக்கு கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதன்படி குறித்த கிராமத்தில் 43 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

கொரோனா அபாயமுள்ள கிராமமாக குறித்த கிராமம் காணப்படுவதால் பொதுமக்கள் பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ள வேண்டுமென சுகாதாரப் பிரிவினர் கோரியுள்ளனர்.

# சாவகச்சேரி சுகாதாரப் பிரிவுக்கு பல்ஸ் கருவிகள் வழங்கிவைப்பு

*(சாவகச்சேரி நிருபர்)*

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரியின் வேண்டுகோளுக்கிணங்க நேற்று முன்தினம் சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் பல்ஸ் ஆக்ஸிமீற்றர் கருவிகள் அந்த வைத்திய அதிகாரி பிரிவுக்கு வழங்கிவைக்கப்பட்டன.

24 ஆயிரம் ரூபா பெறுமதியான எட்டு பல்ஸ் ஆக்ஸிமீற்றர் கருவிகளே இவ்வாறு வழங்கி வைக்கப்பட்டுள்ளன. இக்கருவிகளை சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர் லயன் மினேஸ் - சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.சுதோகுமாரிடம் கையளித்திருந்தார்.




தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

**2021, செப்டெம்பர் 10ஆம் திகதி, வெள்ளிக்கிழமை**

# அரசுக்கு ஒரு சபாஷ்!

பொலனறுவையில் அரிசி ஆலைகளில் நேற்றுமுன்தினம் திடீர் சோதனையில் ஈடுபட்ட அதிகாரிகள் பெருந்தொகையான அரிசியை அரசுடைமையாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

ஜனாதிபதியின் பணிப்புரையின் பிரகாரம் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் செனரத் நிவுன்ஹெல்ல மற்றும் நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சாந்த திசாநாயக்க ஆகியோர் தலைமையில் பொலிஸார், விசேட அதிரடிப்படையினர் இணைந்து திடீர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அங்கு எட்டு ஆலைகளில் ஆயிரத்து 200 தொன் அரிசி அரசுடைமையாக்கப்பட்டு சதொச நிறுவனங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இலங்கையில் அரிசி வியாபாரத்தில் மிகப் பலம்பொருந்திய எட்டு நிறுவனங்கள் சுற்றிவளைக்கப்பட்டன. இதன்போது ஒருசில பிக்குகளும் விவசாயிகளும் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். எனினும் அதிகாரிகள் எந்த விட்டுக்கொடுப்பையும் மேற்கொள்ளத் தயாராக இருக்கவில்லை.

அரசாங்கம் ஒருகிலோ கிராம் நெல்லுக்கு 50 ரூபா தருகின்றபோதிலும் ஆலை உரிமையாளர்கள் 60 முதல் 80 ரூபாவைக் கொடுத்து நெல்லைப் பெற்றுக்கொள்வதாகவும் விவசாயிகள் அதன்போது கருத்து வெளியிட்டிருந்தனர்.

இந்த சோதனை நடவடிக்கை குறித்து ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளதாவது, “பொலனறுவை பிரதேசத்தில் பாரியளவில் நடத்தப்படும் அரிசி ஆலைகளிலிருந்து சந்தைக்கு விநியோகிக்கப்படாத அரிசித் தொகை, அரசாங்கத்தின் கட்டுப்பாட்டு விலையின் கீழ் கையகப்படுத்தப்பட்டதை அடுத்து, அவற்றை சதொச கூட்டுறவு விற்பனை நிலையங்களுக்கு விநியோகிப்பதற்கான போக்குவரத்து ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. இந்த அரிசித் தொகை, நுகர்வோரான பொதுமக்களை உடனடியாகப் போய்ச் சேரவேண்டும் என்பதே, அரசாங்கத்தின் நோக்கமாகும்.

‘நிவ் ரத்ன’ அரிசி ஆலையிலிருந்த அரிசித் தொகையைக் கையகப்படுத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டபோது, அதன் உரிமையாளரால், திட்டமிடப்பட்ட வகையில் எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதோடு, அதிகாரிகளின் பணிகளுக்கும் தடைகள் ஏற்படுத்தப்பட்டன.

அரசாங்கத்தால் அரிசிக்கான கட்டுப்பாட்டு விலைகள் நியமிக்கப்பட்டதை அடுத்து, போதுமானளவு உற்பத்தித் தொகையைப் பேணவும் எவ்விதப் பற்றாக்குறையுமின்றி சந்தைக்கான அரிசியை விநியோகிப்பது தொடர்பிலும், அரிசி ஆலை உரிமையாளர்களுடன், அத்தியாவசியச் சேவைகள் ஆணையாளர் நாயகத்தினால் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டிருந்தது.

இருப்பினும், அவர்கள் இணங்கிய விதத்தில் நடந்துகொள்ளாமையால், அவ் அரிசி ஆலைகளில் காணப்பட்ட அரிசித் தொகையைக் கையகப்படுத்தி விநியோகிக்குமாறு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால், வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன, அத்தியாவசியச் சேவைகள் ஆணையாளர் நாயகம் மற்றும் நுகர்வோர் அதிகார சபையின் தலைவர் ஆகியோருக்கு, ஆலோசனை வழங்கப்பட்டது” எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் அரிசியின் விலையை குறிப்பிட்ட வர்த்தகர்கள் சிலரே நிர்ணயிப்பதாக தொடர்ச்சியாக குற்றம்சுமத்தப்பட்டு வருகிறது. அதாவது, அரிசி விநியோகம், விலை நிர்ணயம் என்பவற்றை அதிகாரம் படைத்த ஒருசிலரே தங்கள் கைக்குள் வைத்திருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள அதிரடி நடவடிக்கை குறித்து மக்கள் மத்தியில் பேசுபொருளாக மாறியுள்ளது.

உண்மையில், மக்கள் நலன்நாடாமல் சுயநலனை மாத்திரம் நோக்கமாகக் கொண்டு செயற்படும் அரிசி ஆலை உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அதற்கென அரசாங்கம் எடுத்திருக்கும் இந்த நடவடிக்கை நாடாட்டத்தக்கது.

அதிகாரத்தோரணையில் செயற்படும் இவ்வாறான மாபியாக்களைக் கட்டுப்படுத்தும் எதிர்பார்ப்பிலேயே இந்த அரசாங்கத்துக்கு மக்கள் ஆணை கிடைத்திருந்தது. தாமதமாகியேனும் இவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றமை மக்கள் மத்தியில் ஓரளவுக்கு திருப்தியளிப்பதாக அமைந்துள்ளது.

அரிசியில் மாத்திரமல்லாது அத்தியாவசிய தேவைகளுடன் கூடிய பல்வேறு துறைகளில் இவ்வாறான மோசடிகள் இடம்பெறுகின்றன. விலையேற்றம் ஏற்படும் என்பதை அறிந்து பொருட்களை பதுக்குவதும் அதிலிருந்து பெருந்தொகை இலாபமீட்டுவதும் அடிக்கடி இடம்பெறுவதுண்டு.

உதாரணமாக இப்போது சீமெந்துக்கான பற்றாக்குறை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஐம்பது கிலோ கிராம் எடையுடைய சீமெந்து பைக்கற்று ஒன்றின் விலை ஆயிரத்து 200 ரூபாவை அண்மித்துள்ளது. வர்த்தகர்கள் நினைத்தமாத்திரத்தில் பொருட்களின் விலைகளை அதிகரித்துள்ளார்கள்.

இதனால் சாதாரண பொதுமக்கள் பல்வேறு இன்னல்களை அனுபவிக்கிறார்கள். அரசாங்கம் என்ற ரீதியில் இந்த அனைத்து விடயங்கள் தொடர்பிலும் தேடிப்பார்த்து அதற்கேற்றாற்போல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாக இருக்கிறது.

# பள்ளிவாசல்கள் சம்மேளனம் அன்றும் இன்றும்



(நேற்றைய தொடர்ச்சி...)

“இன்றைய நிகழ்வுகள் நாளைய சரித்திரமாகும்” என்பது தான் நியதி. எனவே “சுவடுகள்” இவ்வகையில் வரலாற்றில் தடம்பதிக்கின்றது. இதேவேளை அன்றைய சம்மேளனச் செயலாளர், அல்-ஹாஜ். ஐ.எம். இப்றாஹீம், சம்மேளனத்தை மிகப்பலமான ஒரு சிவில் சமூக அமைப்பாக கட்டியெழுப்புவதற்கான பின்னணிக் காரணிகளை இவ்வாறு விபரித்துள்ளார். “2002.02.22 ஆம் திகதி விடுதலைப் புலிகளும் அப்போதைய அரசும் இணைந்து அன்றைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினதும், வே. பிரபாகரனினதும் கைச்சாத்தலுடன் யுத்த நிறுத்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது ”.

அன்று இலங்கையின் அனைத்து மக்களும் சந்தோஷமடைந்தனர். ஆனால் “கிணறு வெட்ட பூதம் வெளிப்பட்டது போல” அந்த யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் பின் கிழக்கின் பல்வேறு முஸ்லிம் பிரதேசங்களில் கடத்தல், கப்பம் கோரல் போன்ற சோகமான சம்பவங்கள் நிகழத் தொடங்கின. மக்கள் கண்ணீருடனும், கவலையுடனும் காணப்பட்டனர். சமூகத்தின் அப்பாவிகள் உதவிக்கரம் கேட்டு நின்றனர். இதன் விளைவாக அன்றைய எமது அரசியல் தலைவர்கள் மௌனிகளாக்கப்பட்டனர். அப்போதுதான் சமூகம் விழித்துக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இந்த சந்தர்ப்பங்களிலும் முஸ்லிம்களும், தமிழர்களும் கலந்து வாழும் பிராந்தியங்களில் முஸ்லிம்கள் சிறிய வரி செலுத்தி வாழ வேண்டிய ஒரு துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

இவைகளிலிருந்து மீட்சி பெறவும், முஸ்லிம்கள் ஒற்றுமைபடவும் ஒரு சிவில் சமூக அமைப்பு பெரிதும் தேவைப்பட்டது. அதனால் தான் 2002-03-16ஆம் திகதி பள்ளிவாசல்கள் சம்மேளனம் சாய்ந்தமருது ஜூம்ஆப் பள்ளியின் மேல்மாடியில் ஆரம்பிக்கப்பட்டது. அதில் உற்சாகமாகக் கலந்து கொண்ட அம்பாறை மாவட்ட சகல பள்ளிவாசல் பிரதிநிதிகளும் இதனை ஒரு சிவில் சமூக அமைப்பாகக் கட்டியெழுப்ப வேண்டும் என உருக்கமாகப் பேசிக் கலந்துரையாடி பொது உடன்பாட்டுக்கு வந்தமை சம்மேளனத்துக்குக் கிடைத்த ஓர் சமூக அங்கீகாரமாகக் கருதப்படுகின்றது.

**அம்பாறை மாவட்ட பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் சாதனைகள்**

அன்றைய கிழக்குப் பிராந்திய விடுதலைப் புலிகளின் தலைவர்களான கருணா அம்மன், இளந்திரையன், கரிகாலன், பாலா, ஜெயம், தயாமோகன், பிள்ளையான், ராமு போன்ற பலருடன் அவ்வப்போது பிராந்திய ரீதியாகக் கலந்துரையாடியதோடு அக்கரைப்பற்று மக்களின் வட்டமடு, முறணாவட்டி போன்ற பிரதேசங்களில் முஸ்லிம்கள் விவசாயம் செய்ய முடியாத சூழ்நிலை ஏற்பட்ட போது படைத்தரப்பு, புலிகள் தரப்பு, யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு, காணி ஆணையாளர், அரசாங்க அதிபர் போன்ற பலருடன் பேசி விவசாயம் செய்யக்கூடிய சாதக சூழ்நிலையை சம்மேளனம் உருவாக்கியது.

முஸ்லிம்கள் வடக்கிலும், கிழக்கிலும் எதிர்நோக்கிய அவல நிலைகளை சர்வதேச சமூகத்துக்குத் தெரியப்படுத்துகின்ற கவனயீர்ப்பைப் பெறும் நோக்கில் இலங்கைக்கு அடிக்கடி வந்து செல்லும் ஜப்பான் நாட்டின் சமாதானத் தூதுவர் யசூசி அகாசியை 2005-12-10ஆம் திகதி சந்தித்து உத்தியோகபூர்வ சம்மேளனத்தின் கடிதத் தலைப்பில் பின்வரும் உப தலைப்புகளில் ஆங்கில மொழியில் தூதுவருக்கு மகஜர் கையளிக்கப்பட்டமை இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில் பொன் எழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டிய அரிய அம்சமாகக் கருதப்படுகின்றது.

1. இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றுச் சுருக்கம்
   Short History of Sri Lankan Muslims
2. யுத்த நிறுத்த உடன்படிக்கைக்குப் பின்னரான அத்துமீறல்கள்
   Atrocities against Muslims after CFA
3. வடகிழக்கு மாகாண சபையில் முஸ்லிம்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள்
   Injustice against the Muslims in N/E Provincial Council
4. சுனாமிக்குப் பின்னரான நிவாரண, மீள்கட்டுமானப் பணிகளில் நடைபெறும் பாரபட்சம்
   (Discrimination in Tsunami Relief & Rebuilding operations)5.
   முஸ்லிம் சமூகத்தில் உயர் அதிகாரிகள்; திட்டமிட்டுக் கொல்லப்படுதல்
   Systematic killings of Muslims
   intelligentsia
6. முஸ்லிம்கள் தற்போது தீர்வாக எதனை விரும்புகின்றார்கள்?
   What do the Muslims want now?
7. பிரத்தியேகமான அதிகாரப் பகிர்வு
   Separate power sharing
8. முஸ்லிம்கள் வேண்டி நிற்பது எது?
   What do the Muslims crave for?

“சுவடுகள்” என்ற சம்மேளனத்தின் சஞ்சிகையில் மேற்படி மகஜர் கனதியைத் தருவதோடு சம்மேளனத்துக்கு சர்வதேச அங்கீகாரத்தைத் தந்துள்ளது. அன்றைய வடகிழக்கில் நடைபெற்று வந்த சிவில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர பாடுபட்டு வந்த வெளிநாட்டுப் பிரதிநிதிகளுடன் சம்மேளனப் பிரதிநிதிகள் முஸ்லிம் சமூகம் சார்பாக பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

**முத்தாய்ப்பாக அமைந்த மூதூர் பிரகடனம்**

அம்பாறை மாவட்ட சம்மேளன வரலாற்றுப் பாதையில் 2006-08-16ஆம் நாள் மறக்க முடியாத சாதனை படைத்த நாளாகும். அக்காலப் பகுதியில் விடுதலைப் புலிகளால் வலிந்து தமது சொந்த மண்ணிலிருந்து வெளியேற்றப்பட்ட ஆயிரக்கணக்கான மூதூர் முஸ்லிம்களின் உரிமையை உலகிற்கு உரத்துச் சொல்வதற்காக கல்முனை பிரதேச மைதானம் ஒன்றில் கிழக்கு வாழ் முஸ்லிம்கள் ஒன்று திரண்டு அஹிம்சை ரீதியில் தமது சகோதரத்துவ உணர்வை வெளிப்படுத்தி மூதூரில் பாதிப்புக்குள்ளாகியிருந்த முஸ்லிம்களின் நல்வாழ்வுக்கு உரத்த குரலில் எழுப்பிய ஓசை உலகெங்கும் ஒலிக்கச் செய்த பெருமை அம்பாறை மாவட்ட அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளனத்துக்கே உரித்தானது என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

சம்மேளனம் வெளியிட்ட “சுவடுகள்” சஞ்சிகையில் “அமைதிப் பேரணியும் மூதூர் பிரகடனமும்” என்ற தலைப்பில் இது இடம்பெற்றுள்ளது. இப்பேரணிக்குத் தலைமை தாங்கிய அன்றைய சம்மேளனத் தலைவர் அஷ்ஷெய்க். மௌலவி. எஸ்.எல்.எம். ஹனீபா மதனி தனது தலைமையுரையில் “அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் மிகத் தெளிவாக ஒன்றைச் சொல்லியிருந்தார் ”.

**மூதூர் பிரகடனம் ஏற்படுத்திய தாக்கங்கள்**

இலங்கைத் தமிழ், சிங்கள, ஆங்கில பத்திரிகைகளிலும், வானொலி, தொலைக்காட்சி ஊடகங்களிலும் லண்டன் BBC அமெரிக்காவின் CNN சர்வதேச ஊடகங்களிலும் இது தொடர்பில் வாதப் பிரதிவாதங்கள் நிகழ்த்தப்பட்டன. அன்றைய BBC வானொலி தமிழோசையில் கடமையாற்றிய சகோதரி ஆனந்தி அடுக் கடுக்காகக் கேட்ட கேள்விகளுக்கு தலைவர் அஷ்ஷெய்க். மௌலவி. எஸ்.எல்.எம். ஹனீபா மதனி வீரியத்தோடு அளித்த பதில்கள் அடுத்த நாள் பிராந்திய புலித் தலைவர்கள் தொலைபேசியில் மௌலவி ஹனீபா மதனிக்கு அச்சுறுத்தல் விடுக்குமளவு தாக்கத்தைச் செலுத்தியமை பலருக்குத் தெரிந்திராத பரம இரகசியமாகும்.

இலங்கையின் அதிஉயர் நீதிமன்றத்திலும், சர்வதேச நீதிமன்றத்திலும் மூதூர் மஜ்லிஸ் ஷூரா வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கைகள் எடுத்தமை அன்றைய நாடாளுமன்ற விவாதங்களில் “மூதூர் பிரகடனம்” காரசாரமாக விவாதிக்கப்பட்டு அதற்கான பலத்த ஆதரவுக் குரலை எழுப்பிய சம்மாந்துறையைச் சேர்ந்த திகாமடுல்ல தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அமைச்சர் மர்ஹூம் எம்.ஐ. அன்வர் இஸ்மாயில் 2007-01-10 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரை தொகுதி – 167, இல : 02 என்ற குறியீட்டில் “ஹன்சாட்டில்” பதிவு செய்யப்பட்டுள்ளமை மூதூர் பிரகடனத்திற்குக் கிடைத்த ஒரு சட்ட அங்கீகாரமாகக் கருதப்படுகின்றது.

இந்த வகையில் தற்போது எமது நாட்டில் ஏற்பட்டுள்ள இன்றைய நெருக்கடியான சூழ்நிலையில் அப்போதைய சம்மேளனத்தைப் போன்று கனதியாக தற்போதைய சம்மேளனங்கள் இயங்க வேண்டியது காலத்தின் தேவையாகும். குறிப்பாக அம்பாறை மாவட்டம் முஸ் லிம்களின் இதயமாகக் கருதப்படுவதால் தற்போது வீரியமிழந்து பலவீனமான நிலைக்குச் சென்றுள்ள இன்றைய அம்பாறை மாவட்ட சம்மேளனம் மறுசீரமைக்கப்பட்டு முக்கிய துறைசார்ந்தவர்கள் உள்வாங்கப்பட்டு வலுவூட்டப்படுவது காலத்தின் தேவையாகும். இதனை நாம் கூட்டாகச் செய்யத் தவறினால் தற்போது இருக்கின்ற பல உரிமைகளையும், வரப்பிரசாதங்களையும் படிப்படியாக நாம் இழக்க நேரிடும்.

இதனை அடியொட்டி நாட்டின் ஏனைய பகுதிகளிலும் தற்போது செயலிழந்துள்ள சம்மேளனங்கள் வீரியத்தோடும், வினைத் திறனோடும் நாட்டின் சட்டங்களை அனுசரித்துச் செயற்பட வேண்டுமென சமூக சிவில் செயற்பாட்டாளர்கள் எதிர்பார்க்கின்றனர்.

(முற்றும்)

**அஷ்ஷெய்க். அன்ஸார் பழீல்
மௌலானா (நளீமி) M.A.
சிரேஷ்ட விரிவுரையாளர்,
மருதமுனை.**

# மூன்று மாதங்களில் 3ஆம் கட்ட தடுப்பூசி ஏற்றுவதற்கான தேவைப்பாடு உருவாகும்

## கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருவதாக விசேட வைத்திய நிபுணர் விஜயசூரிய தகவல்

நாட்டில் மூன்றாம் கட்ட கொரோனா தடுப்பூசி வழங்குவதற்காக தேவைப்பாடு இன்னும் இரண்டு அல்லது மூன்று மாதங்களில் ஏற்படுமென்றும், அதற்கான கலந்துரையாடல்கள் இடம்பெற்றுவருவதாகவும் ரிஜ்வே மகளிர் வைத்தியசாலையின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் ஜீ.விஜயசூரிய தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது வரையில் நாட்டில் ஐந்து வகையான தடுப்பூசிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அதற்கமைய, மூன்றாம் கட்ட



தடுப்பூசி வழங்குவதற்கான காலம் வரும்போது வழங்கவேண்டிய தடுப்பூசிகளின் எண்ணிக்கை மற்றும் ஏனைய தடுப்பூசிகளுடன் மூன்றாம் கட்டமாக செலுத்தக்கூடிய தடுப்பூசியை தெரிவுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த மூன்றாம் கட்ட தடுப்பூசியை முதலில் வழங்குவதற்கு சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். அதேபோன்று, எதிர்காலத்தில் பாரதூரமான நெருக்கடி நிலை ஏற்படும் பட்சத்தில், அந்த சந்தர்ப்பத்தில் சுகாதாரப் பிரிவினரை பாதுகாக்க வேண்டியது அவசியமாகும்.

அரசியல் அதிகாரிகளின் தலையீடு அல்லது அதிகாரிகளின் கோரிக்கைக்கமைய தடுப்பூசி வழங்கப்பட மாட்டாது. மாறாக, விஞ்ஞானக் குழுவின் தீர்வுகளுக்கமையவே தடுப்பூசி வழங்கப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# வவுனியாவில் தகனம் செய்யப்படாத நிலையில் 20 கொரோனா சடலங்கள்

## மரணங்கள் அதிகரிக்குமாக இருந்தால் நெருக்கடி நிலை ஏற்படுமென சுகாதாரப் பிரிவினர் எச்சரிக்கை

(வவுனியா நிருபர்)

வவுனியா வைத்தியசாலையில் கொரோனா தொற்றினால் உயிரிழந்த 20 பேரின் சடலங்கள் தகனம் செய்யப்படாத நிலையில் தேங்கியிருப்பதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா மாவட்டத்தில் கொரோனா தொற்று பரவல் அதிகரித்து வருகின்ற நிலையில், உயிரிழப்புகளும் அதிகரித்து வருகின்றன. இவ்வாறு உயிரிழப்பவர்களின் சடலங்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி வவுனியா, பூந்தோட்டம் பகுதியில் அமைந்துள்ள மின் மயானத்திலேயே தகனம் செய்யப்பட்டு வருகின்றன.

இந்த மின் மயானத்தில் நாளொன்றுக்கு 6 சடலங்களை மாத்திரமே தகனம் செய்ய முடியும். ஆனால், தற்போது கொரோனாவில் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை வவுனியாவில் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. இதனால், உயிரிழப்பவர்களின் சடலங்களை உடனடியாக தகனம் செய்ய முடியாத நிலை உருவாகியுள்ளது.

கடந்த இரு தினங்களில் கொரோனாவால் உயிரிழந்த 20 பேரின் சடலங்கள் தற்போது தகனம் செய்யப்படாத நிலையில், வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன. இந்த சடலங்களை முழுமையாக தகனம் செய்ய மூன்று தினங்கள் தேவையாகவுள்ள நிலையில், தொடர்ந்தும் அதிக எண்ணிக்கையில் உயிரிழப்புகள் ஏற்பட்டால் தகனம் செய்வதில் மேலும் நெருக்கடி நிலை ஏற்படும் என சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, மாவட்டத்தின் தற்போதைய நிலைமையைக் கருத்தில் கொண்டு ஒவ்வொருவரும் சமூகப் பொறுப்புடன் செயற்படவேண்டியது அவசியமென்றும், கொரோனா தொற்றிலிருந்து விடுபட, சுகாதாரத் தரப்பினரின் ஆலோசனைகளைப் பின்பற்றுவதுடன், அரசாங்கத்தினதும், சுகாதாரப் பிரிவினரதும் கொரோனா ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் சுகாதாரப் பிரிவினர் கோரியுள்ளனர்.

# வடக்கில் மேலும் 459 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி

வடக்கு மாகாணத்தில் நேற்று முன்தினம் (08) 459 கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அத்துடன், 8 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த மாதத்தின் முதல் 8 நாட்களில் வட மாகாணத்தில் 4 ஆயிரத்து 546 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், 121 பேர் உயிரிழந்துள்ளனர்.

சுகாதாரப் பிரிவின் அறிக்கையின் படி, நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் 178 பேர், வவுனியாவில் 121 பேர், கிளிநொச்சியில் 77 பேர் என்ற அடிப்படையில் கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், முல்லைத்தீவில் 57 பேருக்கும், மன்னாரில் 27 பேருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, யாழ். மாவட்டத்தில் நால்வரும், மன்னார் மாவட்டத்தில் இருவரும், வவுனியா மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் தலா ஒருவரும் கொரோனா தொற்றினால் உயிரிழந்துள்ளனர். மார்ச் தொடக்கம் நேற்றுவரை வடக்கு மாகாணத்தில் 31 ஆயிரத்து 375 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், 530 பேர் கொரோனா தொற்றுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளனர். இவர்களில் யாழ். மாவட்டத்தில் அதிகளவான நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், இந்த மாவட்டத்தில் இதுவரையில் 14 ஆயிரத்து 651 பேர் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

# மன்னாரிலும் 20 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி ஏற்றும் பணிகள் முன்னெடுப்பு



(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் மாவட்டத்தில் 20 வயதிற்கு மேற்பட்ட சகலருக்கும் சினோபார்ம் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன.

சுகாதார பாதுகாப்பு ஆலோசனைகளுக்கமைய மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. ஏற்கனவே 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் தடுப்பூசி செலுத்தப்பட்டது.

அதற்கமைய, நேற்று (09) மன்னார் மாவட்டத்திலுள்ள 20 வயதிற்கு மேற்பட்ட சகலருக்கும் முதலாம் கட்ட தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் மன்னார் சித்திவிநாயகர் இந்து கல்லூரி, நானாட்டான் டிலாசால் பாடசாலை, மாந்தை மேற்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், மறிச்சிக்கட்டி அல்-ஜெசிரா பாடசாலை மற்றும் மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை ஆகியவற்றில் இடம்பெற்றன. இவர்களுக்கு சினோபார்ம் தடுப்பூசி ஏற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தலைமையில் இடம்பெற்ற இந்த தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரிகள், தொற்றுநோய் விஞ்ஞான பிரிவிற்கான வைத்திய அதிகாரி, வைத்தியசாலை பணியாளர்கள் மற்றும் இராணுவத்தினரால் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# அமைச்சர் நாமல் யாழுக்கு கண்காணிப்பு விஜயம்



இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ நேற்று யாழ்ப்பாண மாவட்டத்துக்கு கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டார். இதன்போது அவர், சென்.பொஸ்கோ பாடசாலை அருகில் புனரமைக்கப்பட்டு வரும் குளம், வீதி, வைத்தியசாலை வீதியில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தித் திட்டம், யாழ்.மாநகர சபை புதிய கட்டடம் என்பவற்றையும் பார்வையிட்டார்.


அமைச்சர் நாமல் ராஜபக்ஷ அபிவிருத்திக் கூட்டிணைப்பு மற்றும் கண்காணிப்பு அமைச்சராக மேலதிக பொறுப்பேற்றுள்ள நிலையில், அரசாங்கத்தின் அனுசரணையில் யாழில் முன்னெடுக்கப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்களை நேரில் கண்காணித்து, அவற்றை துரிதப்படுத்தும் நோக்கிலேயே அவரது விஜயம் அமைந்தது.

இதன்போது யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத்தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன், நாடாளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவன், பிரதமரின் இணைப்புச் செயலாளர் கீத்நாத் காசிலிங்கம், யாழ். மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன், யாழ்ப்பாண பிரதேச செயலர் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

மேலும், பாஷையூரில் நடைபெறும் அபிவிருத்தித் திட்டங்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் கீழ் புனரமைக்கப்படவுள்ள நல்லூர் கலைமகள் விளையாட்டு மைதானம், பல்பரிமாண நகர திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்படவுள்ள மருதனார்மடம், மத்திய கல்வி அமைச்சின் கீழ் இடம்பெற்று வருகின்ற தெல்லிப்பளை அருணோதயா பாடசாலைக் கட்டடம், வறுத்தலைவிளானில் காணியற்ற குடும்பங்கள் ஆகியவற்றின் அபிவிருத்தித் திட்டங்கள், நாவற்குழியில் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி நீர் விநியோக திட்டம் ஆகியவற்றைப் பார்வையிட்டிருந்தார்.

# ஈரானுடனான இருதரப்பு பொருளாதார ஒத்துழைப்பை மேம்படுத்துவது அவசியம்

## வெளிநாட்டமைச்சர் வேண்டுகோள்



ஈரானுடன் வர்த்தகம், முதலீடு, சுற்றுலா மற்றும் ஆற்றல் உள்ளடங்கலான ஒத்துழைப்புக்கான சாத்தியக்கூறுகளுள்ள புதிய துறைகளில் பொருளாதார ஒத்துழைப்பை வழங்குமாறு வெளிநாட்டமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், ஈரானிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஈரான் இஸ்லாமியக் குடியரசின் தூதுவர் ஹாஷேம் அஷ்ஜஸாதே வெளிநாட்டமைச்சரை நேற்று முன்தினம் அமைச்சில் வைத்து சந்தித்தார். இதன்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.


இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கைக்கும், ஈரானுக்கும் இடையில் நீண்டகால நட்புறகள் பேணப்பட்டு வருகின்றன. கடந்த சில வருடங்களில், உயர்மட்ட விஜயங்களை பரிமாறிக்கொள்வதன் மூலம் இருதரப்பு மட்டத்திலும், சர்வதேச அரங்கிலும் நெருக்கமான ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்புக்கு உறவுகள் பங்களித்தன.

ஜெனீவாவில் நடைபெற்ற மனித உரிமைகள் பேரவையின் அமர்வுகள் மற்றும் ஏனைய பல்தரப்பட்ட அரங்குகளில் ஈரான் இஸ்லாமியக் குடியரசு நல்கிய உறுதியான ஆதரவுகளுக்கான இலங்கை அரசாங்கத்தின் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வெளிநாட்டமைச்சராகப் பதவியேற்ற அமைச்சர் பீரிஸுக்கு தூதுவர் அஷ்ஜஸாதே தனது அன்பான வாழ்த்துகளைத் தெரிவித்ததுடன், இலங்கை அரசாங்கத்துடன் இருதரப்பு ஒத்துழைப்பை விரிவுபடுத்துவதற்கான ஈரான் அரசாங்கத்தின் உறுதியான அர்ப்பணிப்பையும், ஆதரவையும் வழங்குவதாக உறுதியளித்தார்.

# அம்பகமுவ சுகாதாரப் பிரிவில் இரண்டாம் கட்ட தடுப்பூசி



(மஸ்கெலியா நிருபர்)

அம்பகமுவ சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட மக்களுக்கு இரண்டாம் கட்ட தடுப்பூசி வழங்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

இதன்போது வெலிஓயா, மீனாட்சி தோட்டம், ஆக்ரோ வா, லோ நெக், அவரஅகந்தை, கரோலினா, தியகல, மௌன்ஜீன், வட்டவளை தோட்டம் மேற்பிரிவு, கீழ்ப்பிரிவு, ரோசல்ல, வட்டவளை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தடுப்பூசிகளை பெற்றுக்கொண்டனர்.

இந்நிகழ்வில் 30 வயதுக்கு மேற்பட்ட ஏராளமானோர் கலந்துகொண்டனர். சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றி இந்த தடுப்பூசி வழங்கும் நடவடிக்கை இடம்பெற்றதாக சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

# மின்வேலியில் சிக்கி காட்டுயானை பலி



(அநுராதபுரம் நிருபர்)

அநுராதபுரம், நொச்சியாகம பகுதியில் சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்டிருந்த மின்வேலியில் சிக்கி காட்டுயானையொன்று உயிரிழந்துள்ளதாக நொச்சியாகம பொலிஸார் தெரிவித்தனர்.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

நொச்சியாகம, கடுபத்வெவ பகுதியிலுள்ள வீட்டுத் தோட்டமொன்றில் சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்டிருந்த மின் கம்பியில் நேற்று சிக்கியதாலேயே இந்த யானை உயிரிழந்துள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் வீட்டுத் தோட்ட உரிமையாளரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நொச்சியாகம பொலிஸாரும், வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளும் தனித்தனியாக ஆரம்பித்துள்ளனர்.

உயிரிழந்த யானையின் பிரேத பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக வனஜீவராசிகள் திணைக்களத்தின் அநுராதபுரம், பண்டுலகம அலுவலகத்தின் மிருக வைத்தியர்கள் அடங்கிய குழுவொன்று முன்னெடுக்கவுள்ளதாக திணைக்களத்தின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.





கொரோனா தொற்றுப் பரவல் காரணமாக நோயாளிகளுக்கு சிகிச்சை வசதிகளை வழங்குவதற்காக பண்டாரவளை மாநகர சபையின் மேயர் ஜனக நிஷாந்த ரத்நாயக்க, மனுசத் தெரண, டயலொக் மீடியா நெட்வோர்க் உட்பட பலரின் பங்களிப்புடன் பதுளை மாகாண பொது மருத்துவமனை, தியத்தலாவ மாகாண ஆயுர்வேத பொது மருத்துவமனை மற்றும் தியத்தலாவ அடிப்படை மருத்துவமனை ஆகியவற்றுக்கு நவீன படுக்கைகள் மற்றும் தீவிர சிகிச்சைப் பிரிவுக்கு பயன்படுத்தக்கூடிய உபகரணங்கள் என்பன வழங்கப்பட்டன. (படங்கள் – ஹாலி எல நிருபர்)

# மட்டக்களப்பு மாவட்டத்தில் 24 மணி நேரத்தில் 43 பேருக்கு டெல்ட்டா – நால்வருக்கு அல்பா தொற்று;

## வவுணதீவில் 10 வயது சிறுவன் கொரோனாவால் உயிரிழப்பு

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பில் கொரோனாவினால் முதல் முதலில் வவுணதீவில் 10 வயது சிறுவன் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், கடந்த 24 மணி நேரத்தில் 43 பேருக்கு டெல்ட்டா தொற்றும் 4 பேருக்கு அல்பா தொற்றும் கண்டறியப்பட்டுள்ளது. இந்நிலையில் மாவட்டத்தில் 88 வீதமானவர்களுக்கு டெல்ட்டா வைரஸ் இருக்கக்கூடிய சாத்தியக்கூறு இருப்பதாக மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் நாகலிங்கம் மயூரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு சுகாதார பிராந்திய சேவைகள் பணிமனையில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடந்த 24 மணி நேரத்தில் ஒருவரும், களுவாஞ்சிக்குடியில் ஒருவரும், ஆரையம்பதியில் ஒருவரும், வவுணதீவில் 10 வயது சிறுவன் ஒருவர் உட்பட 4 பேர் உயிரிழந்துள்ளதையடுத்து, உயிரிழந்தோர் 264 ஆக அதிகரித்துள்ளது.

அதேவேளை 193 பேருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டதுடன், கடந்த வாரம் ஆயிரத்து 357 பேருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதாகவும், 32 பேர் உயிரிழந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும் கொழும்பு ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்திற்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து 49 மாதிரிகள் அனுப்பிவைக்கப்பட்டன. அதில் 43 பேருக்கு டெல்ட்டா வைரஸும், 4 பேருக்கு அல்பா வைரஸும் கண்டறியப்பட்டுள்ளதாக நேற்று முன்தினம் அறிவித்துள்ளனர்.

தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் 88 வீதமானோருக்கு டெல்ட்டா வைரஸ் இருக்கக்கூடிய சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. எனவே பொதுமக்கள் ஊரடங்கு சட்டத்தை மீறி தேவையற்ற விதத்தில் வீடுகளை விட்டு வெளியே வரவேண்டாம். அதேவேளை சுகாதாரத் துறையினரின் அறிவுறுத்தல்களை பின்பற்றி அவதானமாக செயற்படுமாறும் அவர் தெரிவித்தார்.

# கிரான் பகுதியில் 17 பேரிடம் மேற்கொண்ட அன்ரிஜன் சோதனையில் மூவருக்கு கொரோனா



(மட்டக்களப்பு நிருபர்)

கிரான் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவில் மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையில் மூன்று பேருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதாக சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினர் தெரிவித்தார்.

கிரான் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகப் பிரிவில் பொதுமக்கள் மற்றும் வங்கி உத்தியோகத்தர்கள் என 17 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையில் மூன்று பேருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ரி.திவாகரன் தலைமையில் மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் ஆர்.இன்பராஜாவின் மேற்பார்வையில் இடம்பெற்ற பரிசோதனையில் சுகாதார பரிசோதகர்கள், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டுள்ளனர்.

# ஏறாவூரில் பாலியல் குற்றத்திற்காக கைதுசெய்யப்பட்ட பிக்கு எதிர்வரும் 22 ஆம் திகதிவரை விளக்கமறியலில்

(கனகராசா சரவணன்)


மட்டக்களப்பு புன்னைக்குடா விகாரையில் பிக்குவாக படிப்பதற்காக தங்கியிருந்த 11 வயது சிறுவனை பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொண்ட சம்பவம் தொடர்பாக கைதுசெய்யப்பட்ட விகாரையின் பிரதம பிக்குவை எதிர்வரும் 22ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற மேலதிக நீதவான் நேற்று முன்தினம் (08) உத்தரவிட்டார்.

குறித்த விகாரையில் பிக்குவாக படிப்பதற்கு தங்கியிருந்த 11 வயது சிறுவனை பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொண்ட விகாரையின் பிரதம பிக்குவை கடந்த மாதம் 25ஆம் திகதி பொலிஸார் கைதுசெய்து, ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற மேலதிக நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டபோது அவரை நேற்று முன்தினம்வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற மேலதிக நீதவானால் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது கொரோனா காரணமாக அவரை நீதிமன்றுக்கு அழைத்துவரப்படாத நிலையில், காணொளி மூலம் அவரை எதிர்வரும் 22ஆம் திகதிவரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

# கல்முனை பிராந்தியத்தில் டெல்ட்டா வைரஸ் அச்சுறுத்தல்

## சுகாதார பணிப்பாளர் சுகுணன் எச்சரிக்கை!



| MOH AREA | VARIANT PCR DONE ON | INTERPRETATION |
|---|---|---|
| RDHS - Kalmunai | 04-September-2021 | DELTA |
| RDHS - Kalmunai | 04-September-2021 | DELTA |
| RDHS - Kalmunai | 04-September-2021 | INADEQUATE RNA |
| RDHS - Kalmunai | 04-September-2021 | INADEQUATE RNA |
| RDHS - Kalmunai | 04-September-2021 | ALPHA |
| BH - Kalmunai North | 04-September-2021 | DELTA |
| BH - Kalmunai North | 04-September-2021 | DELTA |
| BH - Kalmunai North | 04-September-2021 | DELTA |
| BH - Kalmunai North | 04-September-2021 | DELTA |
| BH - Kalmunai North | 04-September-2021 | INADEQUATE RNA |
| AMH - Kalmunai | 04-September-2021 | DELTA |
| AMH - Kalmunai | 04-September-2021 | DELTA |
| AMH - Kalmunai | 04-September-2021 | DELTA |
| AMH - Kalmunai | 04-September-2021 | DELTA |
| AMH - Kalmunai | 04-September-2021 | INADEQUATE RNA |
| BH - Akkaraipattu | 04-September-2021 | INADEQUATE RNA |
| BH - Akkaraipattu | 04-September-2021 | DELTA |
| BH - Akkaraipattu | 04-September-2021 | DELTA |
| BH - Akkaraipattu | 04-September-2021 | INADEQUATE RNA |
| BH - Akkaraipattu | 04-September-2021 | DELTA |
| BH - Thirukkovil | 04-September-2021 | DELTA |
| BH - Thirukkovil | 04-September-2021 | INADEQUATE RNA |
| BH - Thirukkovil | 04-September-2021 | DELTA |
| BH - Thirukkovil | 04-September-2021 | INADEQUATE RNA |
| BH - Thirukkovil | 04-September-2021 | DELTA |
| BH - Nintavur | | |



(நூருள் ஹுதா உமர்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்குட்பட்ட பிரதேசங்களில் இருந்து பெறப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனை மாதிரிகளில் 95 வீதமானவை டெல்ட்டா தொற்றுக்கள் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஜி.சுகுணன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக கருத்து தெரிவிக்கையில்,

கடந்த 4ஆம் திகதி கல்முனைப் பிராந்தியத்தில் இருந்து பெறப்பட்ட பி.சி.ஆர் மாதிரிகள் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக இரசாயன பகுப்பாய்வு பிரிவுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

18 பி.சி.ஆர் மாதிரிகளில் 17 பி.சி.ஆர் மாதிரிகள் டெல்ட்டா வைரஸும் மற்றையது அல்பா வைரஸ் எனவும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த வைரஸ் வேகமாக பரவக்கூடியதும் மிகவும் அச்சுறுத்தலானதும் என்பதனால் பொதுமக்கள் நிலைமையைக் கருத்திற்கொண்டு பொறுப்புடன் நடந்துகொள்வதோடு, சுகாதார நடைமுறைகளை இறுக்கமாக பின்பற்றி தடுப்பூசியை முறையாகப் பெற்றுக்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

# திருமலையில் தேனெடுக்கச் சென்றவரை தாக்கிய கரடி; தாக்குதலுக்குள்ளானவர் காயங்களுடன் மருத்துவமனையில்

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை - மொரவெவ காட்டுப்பகுதிக்குள் தேன் எடுப்பதற்காக சென்ற நபரொருவர் கரடி தாக்குதலுக்குள்ளான நிலையில், திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

இச்சம்பவம் நேற்று காலை இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு கரடியின் தாக்குதலுக்குள்ளானவர் ரொட்டவெவ - மிரிஸ்வெவ பகுதியைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான ஆர்.இம்தியாஸ் (40வயது) எனவும் தெரியவருகின்றது.

வீட்டிலிருந்து தேன் எடுப்பதற்காக ஆறு பேரைக் கொண்ட குழுவினர் மொரவெவ காட்டுப்பகுதிக்குச் சென்றதாகவும், தேன் தேடுவதற்காக வேறு வேறாக பிரிந்து சென்றபோது மரத்துக்கு அருகில் மறைந்திருந்த கரடி குறித்த நபரை தாக்கியுள்ளது.

இதனையடுத்து குறித்த நபரை அவருடன் சென்ற குழுவினர் மஹதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலையில் அனுமதித்ததாகவும் இதனையடுத்து மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் வைத்தியசாலையின் பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

குறித்த நபரின் கை மற்றும் முகத்தில் காயம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது. தற்போது தேன் மற்றும் காட்டு புளியம்பழம் ஆய்வதற்காக கந்தளாய் மஹதிவுல்வெவ ரொட்டவெவ போன்ற பிரதேசங்களிலிருந்து காட்டுக்குச் செல்வதாகவும் மக்கள் மிகவும் கவனமாக கூட்டாக இணைந்து காட்டுக்குள் செல்லவேண்டும் எனவும் அறிவுறுத்தல் வழங்குகின்றனர்.

ஆனாலும் அறிவுறுத்தல்களை பின்பற்றாமல் காட்டுப்பகுதிக்குள் செல்வதினால் இவ்வனர்த்தம் இடம்பெறுவதாகவும் குறிப்பிடுகின்றனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# கல்முனையில் நீர்க்கட்டணம் செலுத்த நடமாடும் காசாளர்சேவை நடைமுறை



(பாண்டிருப்பு நிருபர்)

கல்முனை பிரதேசத்தில் நீர்க்கட்டணங்களைச் செலுத்தாத நீர்ப்பாவனையாளர்களிடம் இருந்து கட்டணங்களை அறவீடுசெய்யும் நடமாடும் காசாளர் சேவை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மருதமுனை நீர்வடிகாலமைப்புச் சபையினால் பாண்டிருப்பு கிராமத்தில் நீர்க்கட்டணங்களைச் செலுத்தாத பாவனையாளர்களிடம் இருந்து வீடு வீடாகச் சென்று கட்டணங்களை அறவீடு செய்யும் நடமாடும் காசாளர் சேவை நேற்று முன்னெடுக்கப்பட்டது.

கொரோனா தொற்று முடக்கம் காரணமாக நீர்க்கட்டணங்களை செலுத்தமுடியாத பாவனையாளர்களின் வீடுகளுக்குச் சென்ற நீர்ப்பாசன வடிகாலமைப்புச் சபை உத்தியோகத்தர்கள், விரும்பியவர்கள் தங்கள் கட்டணங்களை செலுத்தலாம் எனக் கேட்டுக் கொண்டனர்.

இதுதொடர்பாக கிராமங்களில் ஒலிபெருக்கி மூலம் முன் அறிவித்தல் வழங்கப்பட்டு வருவதுடன், நீர்வடிகாலமைப்புச் சபையின் ஊழியர்கள் கட்டணங்களை பெற்றுக்கொண்டு அதற்கான ஆதாரங்களையும் வழங்கி வருகின்றனர்.



# கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் கொரோனா பிரிவுக்கு மருத்துவ உபகரணங்கள் அன்பளிப்பு




(எம்.என்.எம்.அப்ராஸ்)

கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலைக்கு சுமார் 25 இலட்சம் ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் கடல் கடந்து வாழ் கல்முனை உறவுகளினால் வழங்கி வைக்கப்பட்டன.

நாட்டில் தற்போது கொரோனா தொற்று அதிகரித்து வரும் நிலையில் பலர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்நிலையில் அம்பாறை மாவட்டம் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் அமையப்பெற்றுள்ள கொரோனா தடுப்பு சிகிச்சை நிலையத்திற்கு சில மருத்துவ உபகரணங்களின் அவசியத் தேவை கருதி வைத்தியசாலையினால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய, “எமது உறவுகளை பாதுகாக்க நாமும் பங்காளராவோம்” எனும் தொனிப்பொருளில் கல்முனைக்கான வளைகுடா அமையத்தினால் (12,54,000 ரூபா பெறுமதியான) கல்முனை, சாய்ந்தமருது பிரதேசத்தை சேர்ந்த ஜப்பான் நாட்டில் வசிப்போரின் நிதி பங்களிப்புடன் குறித்த மருத்துவ உபகரணங்கள் வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் ஏ.எல்.எம். றகுமானிடம் நேற்று உத்தியோகபூர்வமாக அன்பளிப்பு செய்யப்பட்டது.

மேலும் இதில் வைத்தியர்களான எம். எம். ஹபிலுல் இலாஹி, ஏ. ஆர். எம். ஹாரிஸ், ஏ. எல். பாறுக், என். சுகைப் ஆகியோர் கலந்துகொண்டதுடன், கொரோனா இடர் காலத்தில் வைத்தியசாலைக்கு மருத்துவ உபகரணங்கள் வழங்கி உதவிய மேற்குறித்த அமைப்பினருக்கு வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் ஏ.எல்.எம். றகுமான் தனது நன்றியினை தெரிவித்தார்.

## மட்டு. நாவலடியில் மதுபான விற்பனையில் ஈடுபட்ட ஒருவர் கைது; 73 போத்தல்களும் மீட்பு



(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு நாவலடி வாவிக்கரையில் அமைந்துள்ள பிரபல ஹோட்டல் ஒன்றின் அருகில் சட்டவிரோதமாக மதுபானங்களை விற்பனை செய்த ஒருவரை 73 கால் போத்தல் கொண்ட மதுபான போத்தல்களுடன், நேற்று முன்தினம் மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸார் கைதுசெய்து ஒப்படைத்துள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

கடற்படை புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் மாவட்ட குற்றவிசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி.கே.பண்டார தலைமையிலான பொலிஸார் நேற்று முன்தினம் இரவு குறித்த பகுதியை முற்றுகையிட்டனர்.

இதன்போது வாவிக்கரையில் வைத்து மதுபானங்களை சட்டவிரோதமாக விற்பனை செய்துகொண்டிருந்த ஒருவரை கைதுசெய்ததுடன், 73 கால் போத்தல் கொண்ட மதுபான போத்தல்களையும் மீட்டனர்.

இதன்போது கைதுசெய்யப்பட்டவரை காத்தான்குடி பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதாகவும் இவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# மட்டக்களப்பு நகர் கள்ளியங்காட்டில் புதிதாக சதொச மொத்த விற்பனை நிலையம் திறந்துவைப்பு



(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு கள்ளியங்காட்டில் லங்கா சதொச மொத்த விற்பனை நிலையம் நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தனால் நேற்று சம்பிரதாயபூர்வமாக திறந்துவைக்கப்பட்டது.

இந்த கட்டட திறப்பு விழா மாவட்ட அரசாங்க அதிபர் க.கருணாகரன் தலைமையில் இடம்பெற்றதுடன், இதில் அதிதிகளாக லங்கா சதொச நிறுவன தலைவர் ஆனந்த பீரிஸ், நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தன் மற்றும் பல அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

இந்த புதிய கட்டடத்தை ஆனந்த பீரிஸ், நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தன், அரசாங்க அதிபர் க.கருணாகரன் ஆகியோர் திறந்து வைத்ததுடன், வியாபார நடவடிக்கையையும் ஆரம்பித்து வைத்தனர்.

# அமெரிக்காவை அதிரச்செய்த நாள் செப்டெம்பர் 11

உலக வல்லரசான அமெரிக்காவை நிலைகுலைய வைத்த நாள் 9/11. சர்வ வல்லமை மிக்க அமெரிக்கா மீது எதிர்பாராத தருணத்தில் நடத்தப்பட்ட பயங்கரத் தாக்குதல் இன்றளவும் பேசும் பொருளாக இருக்கிறது. இரட்டைக் கோபுரத் தாக்குதலின் சூத்திரதாரியான ஒஸாமா பின் லேடனைத் தேடி ஆப்கானுக்குள் நுழைந்த அமெரிக்கா இருபது வருடங்களின் பின்னர் ஆப்கானை விட்டு வெளியேறியுள்ளதால் உலகின் கவனத்தைப் பெற்றுள்ளது.

பயங்கரவாதத்தை உலகிலிருந்து முற்றாக அழிக்கப்போவதாக சபதமெடுத்து யுத்தம் மேற்கொண்ட அமெரிக்கா, தலிபான்களிடம் ஆப்கானிஸ்தானை ஒப்படைத்துள்ளது.

இருபது ஆண்டுகளுக்குப் பிறகும், ஜாக் கிராண்ட்கோலாஸ், காலை 7:03 மணிக்கு எழுந்ததை இன்னும் நினைவில் கொள்கிறார். அவர் கடிகாரத்தைப் பார்த்தார். பின்னர் ஜன்னலுக்கு வெளியே வானத்தில் ஒரு உருவம் கண்ணில் பட்டது - ஒரு தேவதை ஏறுவது போல் ஒரு விரைவான பார்வை. அவருக்கு அது இன்னும் தெரியாது. ஆனால், அவரது வாழ்க்கை மாறிய தருணம் அது.

காலை 10:03 மணிக்கு யுனைடெட் ஃப்ளைட் 93 பென்சில்வேனியா மைதானத்தில் விழுந்து நொறுங்கியது. ஜாக் கிராண்ட்கோலாஸ் அந்தச் செய்தியை தொலைக்காட்சியில் பார்த்துக்கொண்டிருந்தார்.

படுக்கையறையில் உறங்கும்போது அன்று காலை இரண்டு செய்திகளை விட்டுவிட்டார். முதலில், நியூஜெர்சியிலிருந்து சான் பிரான்சிஸ்கோவிற்கு மனைவி முந்தைய விமானத்தில் செல்கிறாள் என்ற நல்ல செய்தி. பின்னர் அவள் விமானத்திலிருந்து அழைத்தாள். "ஒரு சிறிய பிரச்சனை" இருந்தது என்றாள். கிராண்ட்கோலாஸ் நினைவு கூர்ந்தார். "நான் உன்னை விட அதிகமாக நேசிக்கிறேன், அதனைத் தெரிந்து கொள்ளுங்கள். தயவுசெய்து என் குடும்பத்தினருக்கும் நான் அவர்களை நேசிக்கிறேன் என்று சொல்லுங்கள். விடைபெறு, அன்பே" என்ற செய்தி இருந்தது.

கிராண்ட்கோலாஸ் அதிர்ச்சியடைந்தார். அவரது கர்ப்பிணி மனைவியும், குழந்தையும் விமான விபத்தில் இறந்ததை அறிந்து துடித்துப்போனார்.



லாரனுக்கு 38 வயது மற்றும் முதல் குழந்தையுடன் மூன்று மாத கர்ப்பிணி. நியூ ஜெர்சியில் தனது பாட்டியின் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொள்வதற்காக அவர் கிழக்கு நோக்கி பயணம் செய்தார். பின்னர் கர்ப்பத்தை அறிவிக்க கூடுதல் நாட்கள் தங்கியிருந்தார்.

கிராண்ட்கோலாஸ் சோகத்திற்குப் பிறகு மனச்சோர்வு மற்றும் உயிர் பிழைத்த குற்றத்துடன் போராடினார்.

அவர் மறுமணம் செய்துகொண்டு கலிபோர்னியாவின் சான் ரஃபேலில் அவரும், லாரனும் வாங்கிய வீட்டை விட்டு வெளியேறினார். தற்போது அவர் ஒரு விளம்பர நிர்வாகியாக தனது வாழ்க்கையிலிருந்து ஓய்வுபெற்றுள்ளார். அவர் தனது பிறக்காத குழந்தைக்கு அஞ்சலி செலுத்தும் துக்க செயல்முறை பற்றி ஒரு புத்தகம் எழுதுகின்றார். குழந்தைக்கு 20 வயதாக இருக்கும் ஏப்ரல் மாதத்தில் இது வெளியிடப்படும்.






செப்டம்பர் 11, 2001 தாக்குதலிலிருந்து தப்பியதை நேற்றுப்போல் உணர்கிறேன் என்கிறார் ஜோ டிட்மர். உலக வர்த்தக மையத்தின் தெற்கு கோபுரத்தின் 105 ஆவது மாடியில் அமர்ந்திருந்தபோது கடத்தப்பட்ட விமானம் முதல் கோபுரத்தை மோதியது. 61 வயதான அவர் 42 ஆண்டுகளாக காப்பீட்டுத் துறையில் இருக்கிறார்.

கடத்தப்பட்ட விமானம் முதல் கோபுரத்தைத் தாக்கியபோது, அவர் 105 ஆவது மாடியிலிருந்து எதையும் கேட்கவோ, பார்க்கவோ இல்லை என்று கூறினார். "நாங்கள் பார்த்தது ஒளிரும் விளக்குகள் மட்டுமே" என்று டிட்மர் கூறினார். அவர் இருந்த அறை நான்கு சுவர்களால் சூழப்பட்டிருந்தது, ஜன்னல்கள் இல்லை. அந்த நேரத்தில், அவரையும், அறையில் இருந்த மற்ற 54 பேரையும், ஒரு வெடிப்பு காரணமாக வெளியேறச் சொன்னார்கள்.

அவரும் சக ஊழியகளும் வேகமாக கட்டடத்தை விட்டு வெளியேறினார்கள். அதிர்ஷ்டவசமாக ஆபத்தின்றி வெளியேறியவர்களில் ஜோ டிம்மரும் ஒருவர்.

இவர்களைப் போல் பலர் 9/11 ஐ மறக்க மாட்டார்கள். அந்த நாள் ஏற்பட்ட வடு அவர்களின் வாழ்க்கையிலிருந்து இன்னமும் மறையவில்லை. பயங்கரவாதம் இன்னமும் முற்றாக அழிக்கப்படவில்லை. அது புதிய வடிவத்தில் உலகை அச்சுறுத்துகிறது.





**செப்டெம்பர் 11, 2001**

***அமெரிக்கா மீது தாக்குதல் நடத்துவதற்காக நான்கு விமானங்கள் கடத்தப்பட்டன.***

***நான்கு விமானங்களிலும் இருந்த அனைவரும் கொல்லப்பட்டனர். இதில் 246 பேர் பொதுமக்கள். 19 பேர் பயங்கரவாதிகள்.***

***உலக வர்த்தக மையக் கட்டடத்தின் இரு கோபுரங்களிலும் விமானங்கள் மோதின.***

***தெற்கு கோபுரம் 56 நிமிடங்கள் தீப்பிடித்து எரிந்த பிறகு நொறுங்கி விழுந்தது.***

***வடக்கு கோபுரம் 102 நிமிடங்கள் பற்றி எரிந்து நொறுங்கியது.***

***இந்தத் தாக்குதல்களில் மொத்தம் 2,973 பேர் கொல்லப்பட்டனர். இதில் 300 பேர் வெளிநாட்டவர் ஆவர்.***

**விமான எண் 11**

***11 விமானப் பணியாளர்கள் மற்றும் ஐந்து கடத்தல்காரர்களைத் தவிர 76 பயணிகளுடன், அதிகாலை 7:59 மணிக்கு பாஸ்டனிலிருந்து கிளம்பிய விமானத்தைக் கடத்தி காலை 8:46 மணிக்கு, உலக வர்த்தக மையத்தின் வடக்குக் கோபுரத்தைத் தகர்த்தனர்.***

**விமான எண் 175**

***9 விமானப் பணியாளர்கள் மற்றும் ஐந்து கடத்தல்காரர்களைத் தவிர 51 பயணிகளுடன், காலை 8:14 மணிக்கு லோகன் விமான நிலையத்திலிருந்து லொஸ் பாஸ்டனிலிருந்து ஏஞ்சல்ஸுக்கு கிளம்பிய விமானத்தைக் கடத்தி காலை 9:03 மணிக்கு, உலக வர்த்தக மையத்தின் தெற்கு கோபுரத்தை தகர்த்தனர்.***

**விமான எண் 77**

***6 விமானப் பணியாளர்கள் மற்றும் ஐந்து கடத்தல்காரர்களைத் தவிர 53 பயணிகளுடன், காலை 8:20 மணிக்கு வெர்ஜினியாவிலிருந்து ஏஞ்சல்ஸுக்கு கிளம்பிய விமானத்தைக் கடத்தி காலை 9:37 மணிக்கு, பென்டகன் மீது மோத வைத்தனர்.***

**விமான எண் 175**

***7 விமானப் பணியாளர்கள் மற்றும் நான்கு கடத்தல்காரர்களைத் தவிர 33 பயணிகளுடன், காலை 8:42 மணிக்கு நீவர்க் விமான நிலையத்திலிருந்து சான் பிரான்சிஸ்கோவிற்கு கிளம்பிய விமானத்தைக் கடத்தினர். காலை 10:03 மணிக்கு, பென்னிசிலாவனியா மாகாணத்திலுள்ள ஷான்க்ஸின் நிலப்பகுதியின் மீது விமானம் மோதியது.***

***• ரமணி***

# உலக செய்திகள்

# தலிபான்களின் புதிய அமைச்சரவையில் ஐ.நா. கறுப்புப் பட்டியலிலுள்ள 14 தீவிரவாதிகள்

தலிபான்களின் புதிய அரசில் இடம்பெற்றுள்ள 33 அமைச்சர்களில் சுமார் 14 பேர் ஐ.நா. பாதுகாப்புச் சபையின் தீவிரவாதிகள் பட்டியலில் இடம்பெற்றவர்கள் என பி.பி.சி. தெரிவித்துள்ளது. இச்செய்தி சர்வதேச அரங்கில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தற்காலிக அரசின் பிரதமராக அறிவிக்கப்பட்டுள்ள முல்லா முகமது ஹசன் அகுந்த், அவரது இரண்டு துணைப் பிரதமர்கள் ஆகியோரும் இந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ளனர்.

சர்வதேச தீவிரவாதியாக அறிவிக்கப்பட்டுள்ள சிராஜுதீன் ஹக்கானியின் தலைக்கு 10 மில்லியன் அமெரிக்க டொலர் சன்மானம் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், அவர் ஆப்கன் அரசின் உள்துறை அமைச்சராகவும், அவரது சித்தப்பா கலீல் ஹக்கானி அகதிகளுக்கான அமைச்சராகவும் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

பாதுகாப்புத்துறை அமைச்சர் முல்லா யாகூப், வெளியுறவுத்துறை அமைச்சர் முல்லா அமீர் கான் முத்தாக்கி, அத்துறையின் இணையமைச்சர் ஷேர் முகமது அப்பாஸ் ஸ்டானிகாகிசாய் ஆகியோர் தலிபான்கள் தடைசெய்யப்பட்ட குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

தற்போதைய தற்காலிக ஆப்கன் அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள சுமார் 14 பேர் ஐ.நா. பாதுகாப்பு சபையின் தீவிரவாத கறுப்புப் பட்டியலில் இடம்பெற்றுள்ளனர் என்று பி.பி.சி. செய்தி வெளியிட்டுள்ளது.

தலிபான்கள் அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள 33 அமைச்சர்களில் முல்லா முகமது பாஸில் (பாதுகாப்பு இணையமைச்சர்), கய்ருல்லாஹ் கைர்கவா (தகவல், கலாசாரம்), முல்லா நூருல்லாஹ் நூரி (எல்லைகள், பழங்குடிகள்), முல்லா அப்துல் ஹக் வாசிக் (நுண்ணறிவுப் பிரிவு இயக்குநர்) ஆகியோர் குவாண்டனமோ சிறையில் முன்பு அடைக்கப்பட்டிருந்தனர். இவர்களுடன் இருந்த முகமது நபி ஒமரி, கிழக்கு காஸ்ட் மாகாணத்தின் ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

2009 முதல் 2014ஆம் ஆண்டுவரை பணயக் கைதியாக இருந்த அமெரிக்கப் படை வீரர் போவி பிர்கதலை விடுவிக்க, இவர்கள் ஐந்து பேரையும் 2014இல் அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா குவாண்டனமோ சிறையிலிருந்து விடுதலை செய்தார்.

கடந்த 2001ஆம் ஆண்டுமுதல் அமெரிக்கப் படைகளுக்கு எதிராகப் போரிட்ட முக்கிய தலைவர்களுக்கு தற்போது தலிபான் அரசில் அமைச்சர்களாக இடமளிக்கப்பட்டுள்ளது. இதில் பெண்களுக்கு ஓரிடம் கூட அளிக்கப்படவில்லை.

துணைப் பிரதமர்கள் முல்லா அப்துல் கனி பராதர், மௌலவி அப்துல் சலாம் ஹனாபி ஆகிய இருவர் மீது போதைப்பொருள் கடத்தல் வழக்குகளும் உள்ளன. இவர்கள் இருவரும் ஐ.நா.வின் பயங்கரவாத கறுப்புப் பட்டியலில் இடம்பெற்றுள்ளனர்.



முன்னதாக தலிபான்களின் புதிய அரசு அறிவிப்பு குறித்து கருத்து தெரிவித்த ஐ.நா. பொதுச் செயலர் அன்டோனியோ குட்டெரஸின் துணை செய்தித் தொடர்பாளர் ஃபரான் ஹக்,

''அரசுகளை அங்கீகரிக்கும் நடவடிக்கைகளில் ஐ.நா. ஈடுபடுவதில்லை. பேச்சுவார்த்தை மூலம் சுமுகத் தீர்வு காணப்படுவதுதான் போரால் பாதிக்கப்பட்ட ஆப்கானில் அமைதியை நிலைநாட்டும்'' என்றார்.

பயங்கரவாத கறுப்புப் பட்டியலில் உள்ளவர்கள் அமைச்சர்களாக அறிவிக்கப்பட்டுள்ளது குறித்த கேள்விக்கு, ''இதுகுறித்து ஐ.நா. பாதுகாப்பு சபையிலுள்ள உறுப்பு நாடுகள்தான் முடிவு செய்யவேண்டும்'' என்றார் ஃபரான் ஹக்.

இதனிடையே, ஆப்கனில் அனைவரையும் உள்ளடக்கிய அரசு அமையவில்லை என்று பல்வேறு நாடுகள் அதிருப்தி தெரிவித்துள்ளன.

### ''எந்த ஒரு நாட்டுக்கும் எதிரான தீவிரவாத சதிச்செயல்களை அனுமதிக்க மாட்டோம்''

ஆப்கானிஸ்தானில் எந்த ஒரு நாட்டுக்கும் எதிரான தீவிரவாத சதிச்செயல்களை அனுமதிக்க மாட்டோம் என்று தலிபான் அறிவித்துள்ளது.

தலிபான் அதிகாரத்தைக் கைப்பற்றியதையடுத்து முதலாவது அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது. இதையடுத்து தலிபான் தலைவர்கள் விடுத்த அறிக்கையில்,

ஆப்கானில் அனைத்து நாடுகளின் பிரதிநிதிகளும் எந்தவித பதற்றமுமின்றி மன அமைதியுடன் பணியாற்ற வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்து சர்வதேச சட்டங்களையும் உடன்படிக்கைகளையும் மதித்து நடப்போம் என்றும் தலிபான் தலைமை அறிவித்துள்ளது.

### போராட்டங்களுக்குக் கட்டுப்பாடு

இந்நிலையில் முன்னறிவிப்பு இல்லாத போராட்டங்களுக்குத் தடைவிதித்துள்ள தலிபான் அரசு, ஆர்ப்பாட்டம் நடத்துவோர் முன் அனுமதி பெறவேண்டும் எனவும், போராட்டத்தில் எழுப்பும் கோஷங்கள் குறித்து தெரிவிக்கவேண்டும் எனவும் உத்தரவிட்டுள்ளது.

ஆப்கானில் தலிபான் அரசுக்கு எதிராக போராட்டங்கள் வெடித்துள்ளன. துப்பாக்கிக்கு அஞ்சாமல் நூற்றுக்கணக்கான பெண்கள் வீதிகளில் இறங்கி தங்கள் உரிமைகளுக்காக முழக்கமிட்டு வருகின்றனர்.

இதையடுத்து ஆர்ப்பாட்டங்களுக்கான புதிய நிபந்தனைகளை தலிபான் உள்துறை அமைச்சர் அறிவித்துள்ளார்.

### போராட்டத்தில் ஈடுபட்ட பெண்களுக்கு சவுக்கடி

ஆப்கனில், ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடும் பெண்களை தலிபான்கள் சவுக்கால் அடித்து விரட்டியதாக தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த முறை 1996இல் தலிபான்கள் ஆட்சியைப் பிடித்தபோது ஆப்கன் பெண்கள் கடும் கட்டுப்பாட்டுக்கு ஆளாக்கப்பட்டனர். ஆனால், இந்த முறை இஸ்லாமிய ஷரிஆத் சட்டங்களுக்கு உட்பட்டு பெண்களுக்கு உரிமைகள் அளிக்கப்படும் என தலிபான்கள் தெரிவித்துள்ளனர். இந்த நிலையில் ஆப்கன் அமைச்சரவையில் தங்களுக்கு பிரதிநிதித்துவம் இல்லை என்பதற்காக காபூலில் பெண்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தின்போது தலிபான்கள் அவர்களை சவுக்கால் அடித்து விரட்டியதாக தகவல் வெளியாகியுள்ளது.

அந்தப் போராட்டத்தில் பங்கேற்ற பெண்ணொருவர், வீடுகளுக்கு திரும்புமாறும், ஆப்கன் எமிரேட்டை அங்கீகரிக்குமாறும் தாங்கள் மிரட்டப்பட்டதாகக் கூறியுள்ளார். இதனிடையே உரிமைகள் நசுக்கப்படலாம் என ஆப்கன் பெண்கள் மத்தியில் அச்சம் உருவாகியுள்ளதாக ஐ.நா. கவலை தெரிவித்துள்ளது.



விநாயக சதுர்த்தியை முன்னிட்டு கொரோனா கட்டுப்பாடுகளை துறந்து பொருட்கொள்வனவில் ஈடுபட்ட தமிழக மக்கள்...

# பி.எச்.டி. - மாஸ்டர்ஸ் பட்டம் பெற்றா ஹக்கானி குழு ஆட்சியிலிருக்கிறது?

**பட்டங்களுக்கு மதிப்பில்லை என்கிறார் ஆப்கான் புதிய கல்வி அமைச்சர்**



பி.எச்.டி. (PhD), மாஸ்டர்ஸ் (Masters) பட்டங்களுக்கு மதிப்பில்லை என்று ஆப்கானின் புதிய கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் பயங்கரவாத தாக்குதல்களை நடத்திய ஹக்கானி குழுவில் இடம்பெற்றிருந்த பலர் தற்போது அமைச்சர்களாகியுள்ளனர். இந்நிலையில், கல்வியமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள ஷேக் மோல்வி நூருல்லாஹ் முனிர் வெளியிட்ட வீடியோவொன்றில், ''பி.எச்.டி. மற்றும் முதுகலைப் பட்டங்கள் இன்று மதிப்பிழந்து விட்டன. தற்போது ஆட்சி அதிகாரத்திலுள்ள யாரும் பி.எச்.டி. பட்டம் பெற்றவர்கள் அல்லர். பாடசாலைக் கல்விச் சான்றிதழ் கூட இல்லாவிட்டாலும் தற்போது உயர்ந்த நிலையில் இருக்கிறார்கள்'' என்று தெரிவித்துள்ளார்.

# தன்னைத் தானே திருமணம் செய்துகொண்ட பிரேஸில் அழகி



**பிரேஸிலின் மொடலான 33 வயதான கிரிஸ் கேலரா தனது கடந்த காலங்களில் ஏற்பட்ட உறவு முறிவுகளால் விரக்தியடைந்து இனித் தனியாக வாழலாம் என்று தீர்மானித்துள்ளார். இதனையடுத்து அவர் தன்னைத் தானே திருமணம் செய்துகொண்டுள்ளார்.**

**கிரிஸ் கேலராவின் திருமணம் பிரேஸிலின் பிரபல கத்தோலிக்க தேவாலயத்தில் நடைபெற்றது. திருமண நிகழ்வில் கிரிஸ் கேலராவின் நண்பர்கள், உறவினர்கள் கலந்துகொண்டனர்.**

**இதுகுறித்து கிரிஸ் கேலரா தெரிவிக்கையில், நான் எப்போதும் என் வாழ்வில் தனியாக இருக்க பயம் கொள்வேன். ஆனால், தற்போது என்னைக் குறித்து மகிழ்ச்சி கொள்ளவேண்டும் என நான் உணர்ந்தேன். அதை உணர்ந்ததும் அதனைக் கொண்டாட முடிவு செய்தேன். என்னை நானே திருமணம் செய்து கொள்வது அற்புதமாக இருந்தது. ஆனால், எனது முடிவை பலரும் சமூக வலைத்தளங்களில் விமர்சித்து வருகின்றனர். என்னை மற்றவர்களிடம் நிரூபிப்பதில் எந்த அர்த்தமுமில்லை. நான் அவர்களின் கருத்துகளைப் பார்ப்பதில்லை - என்றார்.**




# இலங்கை – தென்னாபிரிக்கா T20 தொடர் இன்று ஆரம்பம்



## பதிலடி கொடுக்க காத்திருக்கும் தென்னாபிரிக்கா

**WIN PRACENTAGE**




ஏ. அகீல் சிஹாப்

தசுன் சானக்க தலைமையிலான இலங்கை அணிக்கும், கேஷவ் மஹராஜ் தலைமையிலான தென்னாபிரிக்க அணிக்கும் இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட ஐ.சி.சி சுப்பர் லீக் தொடரின் ஒருநாள் சர்வதேச தொடரை இலங்கை அணி 2-1 என்ற அடிப்படையில் கைப்பற்றி, 8 வருடங்களின் பின்னர் தென்னாபிரிக்க அணியுடன் ஒருநாள் தொடரை கைப்பற்றிய நிலையில், இரு அணிகளுக்கும் இடையிலான அடுத்த தொடரான 3 போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச தொடர் இன்று கொழும்பு ஆர். பிரேமதாச சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் ஆரம்பமாகிறது.

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியானது மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட தலா 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் மற்றும் இருபதுக்கு 20 சர்வதேச தொடர்களில் விளையாடுவதற்காக இலங்கைக்கு இருதரப்பு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. அந்த வகையில் இரு அணிகளுக்கும் இடையிலான இருதரப்பு கிரிக்கெட் தொடரின் இரண்டாவது தொடரான 3 போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச தொடரின் முதல் போட்டி இன்றைய தினம் ஆரம்பமாகிறது.

**இதுவரையில் மோதிய இருபதுக்கு 20 போட்டிகள்**

இலங்கை - தென்னாபிரிக்கா அணிகள் இதுவரையில் மோதிய இருபதுக்கு 20 சர்வதேச போட்டிகள் தொடர்பில் அவதானம் செலுத்தலாம். கடந்த 2004ஆம் ஆண்டு இருபதுக்கு 20 போட்டிகள் சர்வதேச கிரிக்கெட் உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்டாலும், இலங்கை – தென்னாபிரிக்க அணிகள் கடந்த 2012ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற ஐ.சி.சி இருபதுக்கு 20 உலகக்கிண்ண தொடரில் தான் முதன் முதலாக நேருக்கு நேர் மோதின.

குறித்த போட்டியில் தென்னாபிரிக்க அணி 32 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. அன்றிலிருந்து இன்றுவரையில் இரு அணிகளுக்கிடையில் நடைபெற்றுள்ள 13 இருபதுக்கு 20 சர்வதேச போட்டிகளில் தென்னாபிரிக்க அணி முன்னிலை வகிக்கிறது. அந்த அணி 8 போட்டிகளில் வெற்றிபெற்றுள்ள அதேவேளை, இலங்கை அணி 5 போட்டிகளில் மாத்திரம் வெற்றி பெற்றுள்ளது.

**இறுதி ஐந்து போட்டிகள்**

இறுதியாக நடைபெற்ற 5 இருபதுக்கு 20 சர்வதேச போட்டிகளில், இலங்கை அணி முதல் இரு போட்டிகளிலும், தென்னாபிரிக்க அணி இறுதி 3 போட்டிகளிலும் வெற்றி பெற்று ஆதிக்கம் செலுத்துகிறது.

**இதுவரையில் நடைபெற்ற இருதரப்பு தொடர்கள்**

இலங்கை - தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையில் நடைபெற்ற இருதரப்பு தொடர்கள் தொடர்பில் அவதானம் செலுத்துகின்ற போது இதுவரையில் 4 தொடர்கள் நடைபெற்றுள்ளன. இதில் தென்னாபிரிக்க, இலங்கை அணிகள் தலா இரு தொடர்களை வெற்றி கொண்டுள்ளன. இறுதியாக கடந்த 2019 மார்ச்சில் நடைபெற்ற இருபதுக்கு 20 சர்வதேச தொடரை தென்னாபிரிக்க அணி 3-0 என்ற அடிப்படையில் கைப்பற்றியிருந்தது.

**இருபதுக்கு 20 போட்டி அட்டவணை (போட்டிகள் அனைத்தும் கொழும்பு ஆர். பிரேமதாச மைதானத்தில் இரவு 7.00 மணிக்கு ஆரம்பமாகும்)**

**10 செப்டெம்பர் - முதலாவது போட்டி**
**12 செப்டெம்பர் - இரண்டாவது போட்டி**
**14 செப்டெம்பர் - மூன்றாவது போட்டி**

**இலங்கை அணியின் குழாம்**

தசுன் சானக்க (அணித்தலைவர்), தனஞ்ஜய டி சில்வா, குசல் பெரேரா, தினேஷ் சந்திமால், அவிஷ்க பெர்னாண்டோ, பானுக்க ராஜபக்ஷ, மினோத் பானுக்க, பெத்தும் நிசங்க, சரித் அசலங்க, வனிந்து ஹஸரங்க, ரமேஷ் மெண்டிஸ், கமிந்து மெண்டிஸ், பிரவீன் ஜயவிக்ரம, அகில தனஞ்ஜய, நுவான் பிரதீப், லஹிரு குமார, துஸ்மந்த சமீர, பினுர பெர்னான்டோ, சமிக்க கருணாரத்ன, லஹிரு மதுசங்க, மஹேஸ் தீக்ஷன, புலின தரங்க

**தென்னாபிரிக்க அணியின் குழாம்**

கேஷவ் மஹராஜ், டேவிட் மில்லர், குயின்டன் டி கொக், பியூரன் ஹென்ட்ரிக்ஸ், ரீஸா ஹென்ட்ரிக்ஸ், வியான் முல்டர், லுங்கிங்கிடி, ஹென்ரிச் கிளாசன், ரைஸ் வென்டர் டைஸன், பேர்ஜன் போச்சுன், சிசன்டா மகாலா, எய்டன் மார்க்ரம், டுவைன் பிரிடோரியஸ், ககிஸோ ரபாடா, தப்ரிஸ் ஷம்ஷி, ஜோர்ஜ் லின்டி, அன்ரிச் நோட்ரியா, லிஸார்ட் வில்லியம்ஸ்

Match results

| Team 1 | Team 2 | Winner | Margin | Ground | Match Date |
|---|---|---|---|---|---|
| Sri Lanka | South Africa | South Africa | 32 runs | Hambantota | Sep 22, 2012 |
| Sri Lanka | South Africa | South Africa | 12 runs | Colombo (RPS) | Aug 2, 2013 |
| Sri Lanka | South Africa | South Africa | 22 runs | Hambantota | Aug 4, 2013 |
| Sri Lanka | South Africa | Sri Lanka | 6 wickets | Hambantota | Aug 6, 2013 |
| South Africa | Sri Lanka | Sri Lanka | 5 runs | Chattogram | Mar 22, 2014 |
| South Africa | Sri Lanka | South Africa | 8 wickets | Delhi | Mar 28, 2016 |
| South Africa | Sri Lanka | South Africa | 19 runs | Centurion | Jan 20, 2017 |
| South Africa | Sri Lanka | Sri Lanka | 3 wickets | Johannesburg | Jan 22, 2017 |
| South Africa | Sri Lanka | Sri Lanka | 5 wickets | Cape Town | Jan 25, 2017 |
| Sri Lanka | South Africa | Sri Lanka | 3 wickets | Colombo (RPS) | Aug 14, 2018 |
| South Africa | Sri Lanka | tied |  | Cape Town | Mar 19, 2019 |
| South Africa | Sri Lanka | South Africa | 16 runs | Centurion | Mar 22, 2019 |
| South Africa | Sri Lanka | South Africa | 45 runs | Johannesburg | Mar 24, 2019 |

இதுவரையில் நடைபெற்றுள்ள T20 சர்வதேச போட்டிகள்

# அடுத்தடுத்து இரு தொடர்களை கைப்பற்றி வரலாறு படைத்த பங்களாதேஷ்



சுற்றுலா நியூசிலாந்து அணியுடனான நான்காவது இருபதுக்கு 20 சர்வதேச போட்டியில் 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி, இன்னும் ஒரு போட்டி எஞ்சியிருக்கும் நிலையில் தொடரை கைப்பற்றி வரலாற்று சாதனை படைத்தது.

நியூசிலாந்து கிரிக்கெட் அணியானது 5 போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச தொடரில் விளையாடு வதற்காக பங்களாதேஷுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. முதல் மூன்று போட்டிகள் முடிவில் 2-1 என்ற அடிப்படையில் பங்களாதேஷ் அணி முன்னிலை வகித்த நிலையில், நான்காவது போட்டி நேற்று முன்தினம் டாக்காவில் ஆரம்பமானது.

போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்து 19.3 ஓவர்கள் நிறைவில் 93 ஓட்டங்களுக்குள் சுருண்டது. 94 என்ற இலகுவான வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய பங்களாதேஷ் அணி 19.1 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்களை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

போட்டியில் 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் பங்களாதேஷ் அணி வெற்றி பெற்றதை தொடர்ந்து நியூசிலாந்து அணியுடன் முதல் முறையாக இருபதுக்கு 20 சர்வதேச தொடரை கைப்பற்றி புதிய வரலாறு படைத்தது. அண்மையில் அவுஸ்திரேலிய அணியுடன் நடைபெற்ற 5 போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச தொடரை 4-1 என்ற அடிப்படையில் கைப்பற்றிய பங்களாதேஷ் அணி, தற்போது நியூசிலாந்து அணியுடனான தொடரையும் கைப்பற்றியது.

இரு அணிகளுக்கும் இடையிலான ஐந்தாவதும், இறுதியுமான போட்டி இன்று இலங்கை நேரப்படி பிற்பகல் 3.30 மணிக்கு டாக்காவில் ஆரம்பமாகவுள்ளது.

## மஹ்மதுல்லாஹ் தலைமையில் பங்களாதேஷ் குழாம் வெளியானது

ஐ.சி.சி இருபதுக்கு 20 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடருக்கான 15 பேர் அடங்கிய பங்களாதேஷ் அணியின் குழாம் நேற்று பங்களாதேஷ் கிரிக்கெட் சபையினால் அறிவிக்கப்பட்டது. அறிவிக்கப்பட்ட குழாமின் அடிப்படையில் பங்களாதேஷ் அணியின் தலைவராக சகலதுறை வீரரான மஹ்மதுல்லாஹ் ரியாத் பெயரிடப்பட்டார்.

மஹ்மதுல்லாஹ் ரியாத் தலைமையில் பங்களாதேஷ் அணியானது அண்மையில் அவுஸ்திரேலிய அணியுடனான இருபதுக்கு 20 சர்வதேச தொடரை 4-1 என்ற அடிப்படையில் கைப்பற்றி வரலாற்று சாதனை படைத்த நிலையில், தற்போது நடைபெற்று வருகின்ற நியூசிலாந்து அணியுடனான இருபதுக்கு 20 தொடரையும் கைப்பற்றியது.

பங்களாதேஷ் அணியின் முக்கிய ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான தமீம் இக்பால் உலகக்கிண்ண தொடரில் இருந்து விலகுவதாக அறிவித்த நிலையில், அவர் உலகக்கிண்ண தொடருக்கான குழாமில் பெயரிடப்படவில்லை. உலகக் கிண்ண தொடரில் முதல் சுற்றில் குழு ‘பி’ யில் இடம்பெற்றுள்ள பங்களாதேஷ் அணி தங்களுடைய முதல் போட்டியில் ஒக்டோபர் 17ஆம் திகதி ஸ்கொட்லாந்து அணியை எதிர்கொள்கிறது.

**பங்களாதேஷ் குழாம்**

மஹ்மதுல்லாஹ் ரியாத் (அணித்தலைவர்), ஷகீப் அல் ஹஸன், முஸ்பிகூர் ரஹீம், சௌமியா சர்கார், லிட்டன் தாஸ், அபிப் ஹூஸைன், மொஹமட் நயிம், நூருல் ஹஸன் சொஹான், சமீம் ஹூஸைன், முஸ்தபீசுர் ரஹ்மான், தஸ்கின் அஹமட், மொஹமட் சைபுடின், சூரிபுல் இஸ்லாம், மெஹதி ஹஸன், நாஸூம் அஹமட்

**மேலதிக வீரர்கள்**

அமினுஸ் இஸ்லாம், ரூபல் ஹூஸைன்





டோக்கியோ பராலிம்பிக்கில் ஈட்டி எறிதல் போட்டியில் உலக சாதனையுடன் இலங்கைக்கு தங்கம், வெண்கலப் பதக்கங்களை வென்று கொடுத்த இரு வீரர்களும் நேற்று முன்தினம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை அலரி மாளிகையில் வைத்து சந்தித்தனர். இதன் போது இலங்கைக்கு பெருமை தேடிக்கொடுத்த இரு வீரர்களுக்கும் பிரதமர் தனது வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டார்.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# T20 உலகக்கிண்ண தொடருக்கான இந்திய குழாம் அறிவிப்பு: வழிகாட்டியாக எம்.எஸ் டோனி



ஏழாவது ஐ.சி.சி இருபதுக்கு 20 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரானது ஒக்டோபர் 17ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில் குறித்த தொடருக்கான இந்திய அணியின் 15 பேர் அடங்கிய குழாம் நேற்று முன்தினம் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையினால் அறிவிக்கப்பட்டது.

எதிர்பார்த்த வீரர்கள் வெளியே இருக்கும் நிலையில், எதிர்பாராத வீரர்களுக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது. ஷிகர் தவான், யுஸ்வேந்திர சஹால், குல்தீப் யாதவ் ஆகியோருக்கு வாய்ப்பு கொடுக்கப்படவில்லை. எனினும் ரவிச்சந்திரன் அஸ்வின், வருண் சக்கரவர்த்தி, ராகுல் சஹார் போன்ற சுழற்பந்துவீச்சாளர்களுக்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஐ.சி.சி இருபதுக்கு 20 உலகக்கிண்ண தொடருக்கான இந்திய அணியின் வழிகாட்டியாக இந்திய அணியின் முன்னாள் தலைவர் மஹேந்திர சிங் டோனி பெயரிடப்பட்டுள்ளார். இந்திய அணி தங்களது முதல் போட்டியில் ஒக்டோபர் 24ஆம் திகதி பாகிஸ்தான் அணியை எதிர்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



**இந்திய அணியின் குழாம்**

விராட் கோஹ்லி (அணித்தலைவர்), ரோஹித் சர்மா (உப தலைவர்), கே.எல். ராகுல், சூர்யகுமார் யாதவ், ரிஷாப் பண்ட் (விக்கெட் கீப்பர்), இஷான் கிஷன் (விக்கெட் கீப்பர்), ஹர்திக் பாண்ட்யா, ரவீந்திர ஜடேஜா, ராகுல் சஹார், ரவிச்சந்திரன் அஸ்வின், அக்ஷர் பட்டேல், வருண் சக்கரவர்த்தி, ஜஸ்பிரிட் பும்ரா, புவ்னேஸ்வர் குமார், மொஹமட் ஷமி

**மேலதிக வீரர்கள்**

ஷ்ரேயஸ் ஐயர், ஷர்துல் தாகூர், தீபக் சஹார்

# பொலனறுவையிலுள்ள ஆலைகளிலிருந்து பெருந்தொகை அரிசி அரசுடைமையாக்கல்

● அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் அலுவலகம் நடவடிக்கை

● சதொச கூட்டுறவு விற்பனை நிலையங்களுக்கு கையளிக்கவும் வேலைத்திட்டம்

















பொலனறுவை பிரதேசத்தில் பாரியளவில் முன்னெடுக்கப்பட்டுவரும் அரிசி ஆலைகளின் உரிமையாளர்களின் வசம் காணப்பட்ட பெருந்தொகையான அரிசியை அரசுடைமையாக்குவதற்கான நடவடிக்கை, நேற்று முன்தினம் இடம்பெற்றதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதன்படி, நிபுண, லத்பந்துர, அரலிய, ஹிரு, நிவ் ரத்ன மற்றும் சூரிய போன்ற அரிசி ஆலைகளில் காணப்பட்ட அரிசி தொகையே இவ்வாறு அரசுடைமையாக்கப்பட்டுள்ளது. அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் செனரத் நிவுன்ஹெல்ல மற்றும் நுகர்வோர் அதிகார சபையின் தலைவர் ஆகியோரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

பொலனறுவை பிரதேசத்தில் பாரியளவில் நடத்தப்படும் அரிசி ஆலைகளிலிருந்து சந்தைக்கு விநியோகிக்கப்படாத அரிசித்தொகை, அரசாங்கத்தின் கட்டுப்பாட்டு விலையின் கீழ் கையகப்படுத்தப்பட்டதை அடுத்து, அவற்றை சதொச கூட்டுறவு விற்பனை நிலையங்களுக்கு விநியோகிப்பதற்கான போக்குவரத்து ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

அரிசி ஆலையொன்றிலிருந்த அரிசித் தொகையைக் கையகப்படுத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்ட போது, அதன் உரிமையாளரால், திட்டமிடப்பட்ட வகையில் எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதிகாரிகளின் பணிகளுக்கும் தடைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

அரசாங்கத்தால் அரிசிக்கான கட்டுப்பாட்டு விலைகள் நியமிக்கப்பட்டதை அடுத்து, போதுமானளவு உற்பத்தித் தொகையைப் பேணவும் எவ்விதப் பற்றாக்குறையுமின்றி சந்தைக்கான அரிசியை விநியோகிப்பது தொடர்பிலும், அரிசி ஆலை உரிமையாளர்களுடன், அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தினால் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டிருந்தது.

இருப்பினும், அவர்கள் இணங்கிய விதத்தில் நடந்துகொள்ளாமையால், அரிசி ஆலைகளில் காணப்பட்ட அரிசித் தொகையைக் கையகப்படுத்தி விநியோகிக்குமாறு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன, அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் மற்றும் நுகர்வோர் அதிகார சபையின் தலைவர் ஆகியோருக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

பொலனறுவை மாவட்டச் செயலாளர் டபிள்யூ.ஏ.தர்மசிறி, பொலனறுவை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஒஷான் ஹேவாவிதாரண உள்ளிட்ட பலரும், இந்த நடவடிக்கையில் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் பெண்ணொருவர் அம்பாறையில் மீட்பு

(அம்பாறை)

அம்பாறை, தமன, சீனவத்த பிரதேசத்திலுள்ள வீதியொன்றில் கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில், நேற்று முன்தினம் பெண்ணொருவர் மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த பெண்ணின் தாய், கடந்த 27 ஆம் திகதி தனது மகள் கடத்தப்பட்டதாக, வென்னப்புவ கந்தானகெதர பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்நிலையில், நேற்று முன்தினம் காலை குறித்த பெண், கை, கால்கள் கட்டப்பட்டு வீதியில் கைவிடப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளார். மீட்கப்பட்ட பெண் சிகிச்சைகளுக்காக அம்பாறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## சம்மாந்துறையில் தேசிய வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கை வேலைத்திட்டம் ஆரம்பம்!



(ஐ.எல்.எம் நாஸிம்)

சமுர்த்தி குடும்பங்களுக்காக நடைமுறைப்படுத்தப்படும் சௌபாக்கியா தேசிய வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கை வேலைத்திட்டம் நாடளாவிய ரீதியில் இடம்பெற்று வருகிறது.

இதனடிப்படையில் சம்மாந்துறை பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட சமுர்த்தி வங்கி நான்கு வலயங்களிலும் தெரிவுசெய்யப்பட்ட சமுர்த்தி உதவிபெறும் குடும்பங்களுக்கு தென்னங்கன்றுகள் மற்றும் விதை வழங்கும் ஆரம்ப நிகழ்வு சம்மாந்துறை சமுர்த்தி தலைமை பீட முகாமையாளர் யு.எல்.எம் சலீம் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

இந்நிகழ்வில் அதிதிகளாக சம்மாந்துறை உதவி பிரதேச செயலாளர் யு.எம்அஸ்லம், சம்மாந்துறை பிரதேச செயலக கணக்காளர் ஐ.எல் பாரிஸ், திட்ட முகாமையாளர், வலய முகாமையாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுதாய அடிப்படை அமைப்பின் தலைவர்கள் ஆகியோர் கலந்துகொண்டு விதை மற்றும் தென்னங் கன்றுகளை பயனாளிகளுக்கு வழங்கிவைத்தனர்.

## வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு கிண்ணியாவில் நிவாரண உதவிகள் வழங்கிவைப்பு







(அப்துல் சலாம் யாசீம்)

கொரோனா தொற்றினால் ஊரடங்கு சட்டம் அமுலில் இருக்கும் வேளையில் கிண்ணியா பிரதேச செயலகத்துக்குட்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட தொழில் செய்யமுடியாது கஷ்டப்படும் குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

எம்.பி.எம்.பவுண்டேஷன் நிதி உதவியுடன், கிண்ணியா தீர்ப்பாயத்தின் நேரடி பங்களிப்புடன் உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சம்மாச்சதீவு, பூவரசந்தீவு, மஃரூப் கிராமம், நடுத்தீவு, உப்பாறு, காக்காமுனை மணியரசன்குளம், பெரியாற்றுமுனை மற்றும் ஆலங்கேணி போன்ற கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலுள்ள வறுமைக்கோட்டில் வாழும் மக்களுக்கு இந்த உலருணவு பொதிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அரிசி, சீனி, பெரிய வெங்காயம், உருளைக்கிழங்கு, தேயிலை போன்ற சுமார் ஆயிரம் ரூபா பெறுமதியான உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. முதற்கட்டமாக சம்மாச்சதீவு கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள 30 குடும்பங்களுக்கான உலருணவுப் பொதிகளை கிண்ணியா பிரதேச செயலாளர் எம். ஏ.எம். அனஸ் வழங்கிவைத்தார்.

இதன்போது கிண்ணியா தீர்ப்பாயத்தின் தலைவர் எம்.எப்.பர்ஸித், செயலாளர் ஐ.ஏ.எம்.முயீஸ் மற்றும் ஊடகவியலாளர் ஐ.எம்.இர்ஷாத் ஆகியோர் கலந்துகொண்டனர். அதனைத் தொடர்ந்து பூவரசந்தீவு, புதுக்குடியிருப்பு, மணியரசன்குளம் பிரதேசத்திலுள்ள வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பிரதேச செயலாளரினால் வழங்கிவைக்கப்பட்டன.

ஏனைய பிரதேசங்களிலுள்ளவர்களுக்கு கட்டங்கட்டமாக வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.